Registered No. M. 878

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization

தொகுதி 7 } 1916-ம்௵ ஆகஸ்டுமீ நள௵ ஆடிமீ { பகுதி 4

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L., F.T.S. பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

# பொருளடக்கம்.

## (CONTENTS)


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர்<br>Current events—R. Rangaswamy Iyer. | 121 |
| 2. | திருக்குறள் பொது நோக்காராய்ச்சி—யம். ஸ்வாமிநாத ஐயர்<br>Some researches in Tirukkural—M. Swaminatha Iyer. | 129 |
| 3. | பகவத் கீதா சுலோகங்கள்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்<br>Some Shlokas from the Bhagavad Gita—R. S. Narayanaswamy Iyer. | 138 |
| 4. | ரவீந்திர நாத் டாகோரின் சரித்திரம்—ராகவ ஐயர்<br>Life of Rabindranath Tagore—Raghava Iyer | 141 |
| 5. | குருக்களும் சிஷ்யர்களும்—C. W. லெட் பீடர்<br>Masters and pupils—C. W. Leadbeater | 146 |
| 6. | சமாசாரம்—News. | 153 |
| 7. | புத்தக வரவு (Review of Books | 159 |


## தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.


| | | |
|---|---|---|
| 1. | மாதுஸ்ரீ அனீபெஸண்ட் அம்மையார் சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 2. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 3. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 4. | காயத்ரீ | 0—1—0 |
| 5. | காயத்ரீராமாயணம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் மொழிபெயர்ப்பும்) | 0—1—0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மஞான ஸபை பிரசிடெண்டு அவர்களுக்கு" எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

137

ௐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 7 | 1916-ம்ஸு ஆகஸ்டுமீ நளஸு ஆடிமீ | பகுதி 4

## தற்கால நிலைமை.

மத்யபானம் செய்தல் மிகவும் கெடுதி விளைக்கும் தன்மையது என்று நம்முடைய சாஸ்திரங்களினின்றும் தற்கால பிரஹ்மஞான புத்தகங்களினின்றும் நன்கு விளங்குகின்றது. முற்காலத்தில் இந்துக்கள் பெரும்பாலும் இந்த பெரிய பாபத்திற்கு இடங்கொடாமல், சாதாரணமாய் குடியென்பதே இல்லாமல் இருந்தார்கள் என்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தக் காலத்திலோ "நாகரிகத்தின்" மேலீட்டினால் நகரங்களிலும் நாட்டிலும் திரும்பிய விடமெல்லாம் கள்ளுக்கடைகளும் சாராயக்கடைகளும் மேனாட்டுச் சாராயக் கடைகளும் தென்படுகின்றன. பெரும்பாலும் 'கீழான' தொழில்களைச் செய்பவர்களும் "மேலான" அந்தஸ்திலிருப்பவர்களில் சிலரும், அவரவர்கள் மனத்துக்கும் அந்தஸ்துக்கும் தக்கவாறு மேற்கண்ட கடைகளுக்குப் போய் தங்கள் பணத்தையும் புத்தியையும் ஒருங்கே இழந்து வருவதையும் நாம் கண்ணால் பார்க்

கிறோம். இந்நகரில் மிகப் பெரியதாயும் மிகக் கண்யமதை யுள்ளதாயும் கொண்டாடப்பட்ட "ஸ்பென்சர் ஷாப்பின்" வாயிலில் இருபக்கமும் பெரிய பெரிய படங்கள் வரைந்து உயர்ந்த மேனாட்டுச் சாராயத்தைச் சாப்பிடுவதில் சொல்லொணு ஆநந்தம் உண்டாகுமென பார்ப்போர் யாவருக்கும் தோற்றுவிக்குமாறு விளம்பரம் செய்யப் பட்டிருப்பதைப்பார்க்கிறோம். சின்னுட்களுக்குமுன்னர் அந்தக்சடைக்கு முன் மட்டுமல்லாமல் சமீபத்திலுள்ள வீதிகளிலும் கூட அம்மாதிரி படங்கள் பிரசுரிக்கப் பட்டிருந்தன. முற்காலத்தில் மதுபானம்செய்தவர்கள் ரகசியமாய் அப்பாபத்தை அப்யசித்தார்கள். தாங்கள் செய்வது பாபம் என்று அறிந்தார்கள். நல்ல புத்தி வந்த உடன் அதை விட்டுவிட நேரிட்டது. ஆனல் இப்போது "மேனுட்டு நாகரிகத்தை" அனுசரிதது அநேகர் குடிப்பதில் கௌரவம் பாராட்டிக் கொண்டு வருகிறார்கள். இது மிகவும் விசனத்துக்கு காரணமானதென்று புத்திமான்கள் ஒப்புக் கொள்வார்கள். ஸுராபானமானது ஐந்து மஹாபாதகங்களில் ஒன்று என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமென்ன?

***

ஐரோப்பா கண்டத்தில் ருஷியா தேசத்தில் சாதாரண ஜனங்கள் மதுபானப் பிரியர்களாயிருந்து வந்தார்கள். 1914-ம் வருஷம் ஜூலை மாசம் 18உ யுத்த சன்னத்தம் செய்ய உத்தரவான நாளே குடியை யெல்லோரும் நிறுத்த வேண்டுமென்றும் மத்யம் விற்கக் கூடாதென்றும் உத்தரவும் பிறப்பிக்கப் பட்டது. இவ்வுத்தரவுக்கு முன் ருஷியா தேசத்தின் ஸ்திதியும் அப்பால் உள்ள ஸ்திதியும் ஆங்குள்ள ஆங்கிலேயர் ஒருவரால் நனகு விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றது. மத்ய பானத்தின் கெடுதிகளும் அதைத் தவிர்த்தலின் நன்மையும் எத்தேசத்திலும் ஒன்றுகவே யிருத்தலால் அவைகளை இங்கு சற்று கவனிப்போம்.

மோசக்காரர்கள் கிராமத்து பெரிய மனுஷர்களுக்கு மத்யத்தைக் கொடுத்து அந்த சமயத்தில் கிராமப் பொது நிலங்களை வெகு சலிசான வாடகைக்கு வாங்கி வந்தார்கள். கடன் கேட்பவர்களுக்கு மத்யம் கொடுத்து மனம் போன படி வட்டியைப் போட்டும் கொடுத்த தொகைகளுக்கு மேற்பட்ட தொகையைக் கொடுத்ததாக எழுதி மோசமாய் கையெழுத்து வாங்கியும் வந்தார்கள். குடித்த வெறியில் நிகழ்ந்த கலகத்தால் ஒருவருக்கொருவர் அஹங்காரம் முதிர்ந்து எதிரிகளின் வீடுகளில் நெருப்பு வைத்து நாசம் செய்து வந்தார்கள். குடிவெறியில் அஜாக்கிரதையாயிருந்ததினால் எறிந்துபோன வீடுகளனேகம். இப்படி வீட்டிலல்லாமல் நாடெங்கும் பிச்சைக்கலையும் ஏழைகள் பலர். சமீபத்தில் பலர் குடிப்பதைப் பார்த்து அந்த தாகத்தை யடக்க முடியாமல் ஏழையானவன் வீட்டிலுள்ள தானியம், சாமான், தட்டுமுட்டு, இவைகளை குறைந்த விலைக்கு விற்றுத் தின்டாடுவது சாதாரணம். குடியால் சரீரம் சீர் குலைந்து ஒரு சிறு பிணி வந்தாலும் சௌக்கியமாவது கடினம். இத்தகைய கெடுதல்கள் பல நிகழ்ந்தனவாம். ஆனால்மேற்கண்ட தேதி முதல் மத்ய பானமே முற்றிலும் நின்றுவிட்டது. சைனியத்தில் குடியே கிடையாது. காயம் பட்டால் காயம் மிகச் சீக்கிரம் சௌக்கியமாய் விடுகின்றது. சாதாரண ஜனங்களுக்கும் அநேகமாய் பிணிகள் வருகிறதில்லை. சண்டை சச்சரவுகள் குறைந்து தேசம் அமைதியாயிருக்கிறது. குடியானவர்கள் முன்னைவிட வெகு தனிகர்களாயிருக்கிறார்கள். குடிப்பது சரியானதல்லவென்று அபிப்பிராயம் பரவி வருகின்றது. இம்மாதிரியே இருந்தால் ருஷியாதேசத்தின் அபிவிருத்திக்கு வரம்பே கிடையாது என்று சொல்லுகிறார்கள்.

***

ஒவ்வொரு ஜீவனும் தன்னுடைய லாப நஷ்டத்துக்கு பாத்தியஸ்தன். அவனவனுடைய நடத்தையை அவனவன் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது நியாயமே யொழிய,

அவன் கெட்டுப் போகாத வண்ணம் அவனைப் பாதுகாக்க வேண்டியது அரசனுடைய கடமையலல. இதுவுமல்லாமல் ஒருவனை தன்னிடமிருந்தே காப்பாற்ற முயலுதல் அவனுடைய அபிவிருத்திக்கே கெடுதி. ஸ்வேச்சை ஒவ்வொரு ஜீவனுக்கும் இருத்தல்வேண்டும். ஒரு தப்பிதம் செய்தால் அதனால் நேரிடும் கெடுதல்களை அனுபவிப்பான். பலதடவை கஷ்டத்தை அனுபவித்தால் தப்பிதம் செய்வதால் நேரிடும் கேட்டை நன்றாய் உணர்ந்து பின்னால் அக்காரியத்தைச் செய்ய முன் வரமாட்டான். இந்த மாதிரிதான் ஒவ்வொரு ஜீவனுடைய ஸ்வபாவமும் பலப்படுகின்றது. ஆகையால் ருஷியாவில் அரசனால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைப்போல் இங்கிலாந்திலும் பிறப்பிக்கவில்லை. குடிக்க சகல சாதனங்களும் சுற்றியிருக்க, ஸ்வேச்சையாயிருக்கும் ஒருவன் சுராபானம் செய்யாமலிருந்தால் மேன்மைதான். அவன் திடசித்தமுள்ளவனாகிறான் என்பதில்சந்தேகமில்லை. ஆனால் குடியால் ஒவ்வொருவனுக்கும் நேரிடும் கெடுதிகளை யுத்தேசித்து அரசன் அவ்வித உத்தரவு கொடுப்பதே நியாயமெனத் தோன்றுகின்றது. இந்த ஆசையாலிழுக்கப்படுகிற ஜனங்கள் பெரும்பாலும் குழந்தைகள் போலாவார்கள். ஆசையை அடக்கும் விதமே அறியாதமூடர்கள். எவ்வாறு குழந்தைகளை அபாயத்திலிருந்து தவிர்ப்பது பெற்றோர் கடமையோ, அவ்வண்ணம் குழந்தைபோன்றவர்களையும் அபாயத்திலிருந்து தவிர்ப்பது அரசன் கடமையாகும். ஏன் என்றால் மேற் கூறிய கெடுதிகளைக் காட்டிலும் மத்திய பானத்தால் ஒரு ஜீவனுடைய காமனு சரீரத்துக்கும் மானவஸிக சரீரத்துக்கும் நேரிடும் தீங்கு மிகவும் கொடியது என்றும், ஸுரா பானம் செய்பவன் இறந்த பின்னர் மேல் லோகங்களுக்கு போகாதபடி குடிக்குமிடத்தை சுற்றிச்சுற்றி வந்து அந்தப்பக்கம் வருபவர்களையெல்லாம் குடிக்கும்படி தூண்டிக்கொண்டிருந்து குடியினால் அவர்களுடைய பிராணமய கோசத்திலும் காமனு சரீரத்திலும் ஏற்படும் ஒருவித கிளர்ச்சியைத்தன்னுடையதாக பாவித்து அநுபவிப்பதாயும், குடிக்குமிடத்தைச்சுற்றி

கீழான யக்ஷிணீ முதலிய துர்தேவதைகள் அலைந்து கொண்டு அங்கு வருபவர் மனத்தையெல்லாம் இக்கெட்ட வழியில் தூண்டுகின்றனவென்றும் நாம் பிரஹ்மஞானப் புத்தகங்களில் படிக்கவில்லையா?

***

பரம்பரையாய் மத்யபானம் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர்களுக்குள்கூட அத்துர்வழக்கத்தை நிறுத்தமுடிந்தது என்றால் அனாதி காலமுதல் குடிப்பதே வழக்கமில்லாமல் சில காலம் மட்டும் அந்த துர்வழக்கத்தை அநுஷ்டிக்கும் இந்தியர்கள் அந்த வழக்கத்தை விடுவது முடியாத கார்யமில்லை. இப்படிச் செய்வதற்கு இரண்டு வகையுண்டு. ஒன்று சர்க்காரில் கள், சாராயம் வகையறா விற்கும் கடைகளையே முற்றிலும் நிறுத்திவிடல். நம்மிந்தியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இச்சீர்திருத்தம் ஏற்படுத்துவதில் சிரமமாகமாட்டாது. ஆனால் ஆங்கிலேயர்களோ இதற்கு சம்மதிக்கமாட்டார்கள். ஆனால இக்கடைகளின் சங்கைகளை மிகவும் குறைக்கும்படிக்கும் அக்கடைகள் திறந்திருக்கும் நேரத்தையும் மிகவும் குறைக்கும்படிக்கும் உத்தரவு செய்யலாம். மற்றொரு வகையானது ஜனங்கள் தேடக்கூடியது. குடியால் விளையும் கேடுகளைப்பற்றி துண்டுப் பத்திரிகைகள் ஆயிரக்கணக்காக அச்சிட்டு அந்த துர்வழக்கத்தை அனுஷ்டிக்கும் ஜனங்களிடம் பரவச்செய்யலாம். அடிக்கடி தெருக்களில் பிரசங்கங்கள் செய்து மனதைத் திருப்ப முயலலாம். திருவிழாக் காலங்களில் முக்கியமாயப் பிரசங்கங்கள் நடத்தினால் அதனால் மிகப்பயனாகும். எவ்வாறாயினும் குடித்தல் கௌரவத்துக்கு குறை என்ற எண்ணமானது ஜனங்களுக்குள் பரவும்வண்ணம் முயல்வது முக்கியம்.

***

இவ்வாறு முயல்வது தேச கைங்கர்யமாகும். தற்காலத்தில் ஜனசமூகக் கைங்கரியத்துக்கென்று முன் வருபவரின் சங்கை அதிகரித்து வருகின்றது. இதுவே ஜனங்களின் சகோதர பாவத்தை வெளிப்படுத்தும் முக்கியவழி.

பிரஹ்மக்ஞான சகோதரர்கள் இந்த கைங்கரியத்தை கைக்கொண்டால் தங்கள் கொள்கையின் உண்மையை நடத்தையில் காட்டியவர்களாவார்கள்.

***

நமது பிரஹ்மக்ஞான சபை அக்கிராசனாதிபதியை பம்பாய் ராஜதானிக்குள் பிரவேசிக்கக் கூடாது என்று பம்பாய் கவர்னர் அவர்கள் உத்தரவு செய்திருப்பதாகப் பத்திரிகைகள் மூலமறிய மிகவும் வியசனிக்கிறோம். நமது மாதுஸ்ரீ பெஸண்டம்மாளவர்களுடைய தீவிர ராஜபக்தியும், நமது ஜார்ஜ் சக்கிரவர்த்தியினிடம் உள்ள உண்மையான விசுவாசமும், ஆங்கில ராஜ்யத்தின்கீழ் நீடூழி இந்தியா தேசமானது இருந்து இருதேசங்களும் மேன்மையடைய வேண்டுமென்ற எண்ணத்தை அன்னவர் அடிக்கடி வெளியிட்டிருப்பதும், ஆங்கிலதேசம் வெற்றியடைய வேண்டுமென்று அம்மையாரின் தீவிரமான அபிப்பிராயமும் நன்றாக யாவரும் அறிவார்கள். அப்படியிருக்க அன்னவருக்கு விரோதமாய் இவ்வுத்தரவு பிறந்திருப்பதைப் பற்றி பிரஹ்மஞான சபை அங்கத்தினர்களும் மற்றும் இதரர்களும் வருத்தமடையாதிரார்கள். இருந்த போதிலும் உண்மையையும் நியாயத்தையும் வெகுகாலம் மறைக்க முடியாதென்பது திண்ணம். சிலகாலம் மேகத்தால் மூடப்பட்ட சூரியனைப் போல் நமது அக்கிராசனாதிபதியின் உண்மையான ராஜவிசுவாசமும், ராஜ்யத்துக்குச் செய்திருக்கும் உபகாரமும், மறுபடியும் அதிகாரிகளாலும் அறியப்பட்டு பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

***

'தியசாபிகல் எடியூகேஷனல் டிரஸ்டு' என்று ஆங்கிலப் பெயர்பூண்ட "பிரஹ்மஞான வித்யாசாலை நிர்வாகசபைக்கு உபகாரியதரிசியான எர்னஸ்டு கர்கு என்றவர் மேற்கண்ட சபைக்கு வருவாய் தேடும் வண்ணம் தென்னிந்தியாவில் அலைந்து வந்திருக்கிறார். அவர் தாம் கொண்ட சில அபிப்

பிராயங்களை வெளியிட்டிருக்கிறார். அவைகளில் சில நம்முடைய குணங்களை சிலாகித்தவைகளாயிருக்கின்றன; ஆனால் நம்மவர் குறைகளைப் பற்றி அவர் அபிப்பிராயம் இன்னது என்று நாம் தெரிந்துகொண்டால் அவைகளை நாம் நீக்க முயலலாமாகையால் அவைகளைச் சிறிது கவனிப்போம்.

***

பிரஹ்மஞான சபை அங்கத்தினர்களில் பலர் உபந்யாசம் கேட்கும் போதும், புஸ்தகங்களைப் படிக்கும் போதும், அல்லது பிரஹ்மஞான படிப்பினைகளைப்பற்றி வாதாடும்போதும் மிகவும் உத்ஸாஹமாகயிருக்கிறார்கள். ஆனால் பிரஹ்மஞான சபைக்காகவாவது அல்லது சபை சம்பந்தமான உப கைங்கர்யங்களுக்காகவாவது ஏதாவது கொஞ்சம் காரியம் செய்யவேண்டுமானால் முன் வருகிறதில்லை. பெரும்பாலர் குறிப்பிட்ட காலத்தில் அக் காரியத்தை செய்வதென்பதே கிடையாது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் வருவதாக வாக்களித்தால் அந்த வாக்கைக் காப்பாற்றுவதே கிடையாது. ஆறு தடவைகளில் தவறாமல் ஒரு காரியத்தை நிறைவேற்றுவதாய் வாக்களித்த ஒரு அங்கத்தினர் அவ்வாறு தடவைகளிலும் தவறினார் என்றும், இதைப் பற்றி அந்தக் கிளைச் சபை உத்யோகஸ்தரிடம் தெரிவித்ததாயும் அதற்கு அவர் முற்கூறிய அங்கத்தினர் ஏமாற்றவேண்டும் என்று பொய் சொல்லவில்லையென்றும், ஆனால் நேராக வரமாட்டேன், முடியாதென்று மறுத்துக் கூறல் அவமரியாதை செய்ததாகுமாதலால் மரியாதைக்காகமட்டும் அப்படிச்சொன்னார் என்றும் சமாதானம் கூறினாராம். இவ்வித மரியாதையைச் செய்வதைக் காட்டிலும் உண்மையைச் சொல்லி மரியாதை செய்வது மேன்மையல்லவா? பிரஹ்மஞான சபை அங்கத்தான் சொல்லும்வார்த்தை உறுதியாயிருக்கவேண்டாமா என்று வினவுகிறார். மேலும் உபந்யாசங்கள், அல்லது கூட்டங்கள் ஏற்பாடு செய்வதாயிருந்தால் ஏற்கனவேமுன் ஏற்பாடுகள் செய்வதைக் காணோம். பெரிய கான்பெரன்ஸ்முதலிய மகாநாடு

களில் கவனமாக முன் ஏற்பாடுகள் செய்து அவைகள் நன்கு நடைபெறுகின்றன. ஆனால் சாதாரணமாக வாரந் தோறுமாவது அல்லது இடையிடையே கூடும் சிறுகூட்டங் களில் குறிப்பிட்ட காலத்துக்குள் வெகு சிறு பேர்கள் தான் வந்திருக்கிறார்கள். அக்கிராசனாதிபதி கூட 25 அல் லது 30 நிமிஷங்களுக்குப் பிறகு தான் வருகிறார். வந்த பிறகு, தான் நாழிகை கழித்து வந்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்றுகூடச் சொல்லாமல் யாதொரு தவறுதலும் இல்லாததுபோல் அன்று நிகழவேண்டிய காரியத்தை கவ னிக்கிறார். இது சாதாரணமான வழக்கமென்று தோன்று கிறது. இந்த விஷயங்கள் எல்லாம் யோசிக்கு மளவில் சரியல்லவென்பது யாவருக்கும் தோன்றும்.

***

லண்டன் மாநகரத்தின் பிரஹ்மஞான சபையில் நிக ழ்ந்த பல உபந்யாசங்களைக் கேட்கும் பாக்கியம் தனக்கு கிடைத்தது என்றும், அவ்விடத்தில் உபந்யாசத்துக்கென்று செய்யப் பட்டிருந்த சகல ஏற்பாடுகளும் வெகு விமர்சை யாயிருந்தன வென்றும் ஸ்ரீமான் கர்கு சொல்லுகிறார். உபந்யாசம் செய்யுமிடம் அழகாக சுத்தம் செய்யப் பட்டு இலைகளாலும் புஷ்பங்களாலும் அலங்காரம் செய்யப் பட் டிருந்தது. வரும் தனவான்களையும் பெருமாட்டிகளையும் வரவேற்று அவரவர்கள் ஆசனத்துக்கு அழைத்து செல்வ தே மிக அழகாய் இருந்தது. உபந்யாசகரும் குறிப்பிட்ட சமயத்துக்கு முன்னரே வந்திருந்தார். உபந்யாசத்தில் என்ன சொல்வது என்று தீர்மானம் செய்து வந்திருந்தார். அக்கிராசனபதியும் அவசியமான மட்டிலும் கொஞ்சமாக சில வார்த்தைகள் சொன்னார். இவைகளை யெல்லாம் பார் த்த பிறகு தென் இந்தியாவில் சில கிளைச்சபைகளில் நடக் கும் ஒழுங்கீனத்தைப் பார்க்க வருத்தமாயிருக்கின்றது என்கிறார். அங்கத்தினர்கள் ஆங்காங்குள்ள குறைகளை நீக்க முயல்வார்கள் என்று இவ்விடத்தில் எடுத்தெழுதப் பட்டது.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

# திருக்குறட்பொது நோக்காராய்ச்சி

(ஆறுந்தொகுதி 382ம் பக்கத் தொடர்ச்சி)

முன் சூத்திரத்தின் பயனாக மற்றும் நாமடைவதென்ன வெனில், அகரம் தான் தனித்தும், ஏனைய உயிர்கட்குள் உயிராயும் அவ்வுயிர்களேறிய மெய்களுக்குள் உயிர்க்குயிராயும் நின்று அவைகளை இயங்கச் செய்வதைப்போல, கடவுளானவர் தாம் தனித்து நின்றும் தம்மால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற சகல சராசரப்பொருள்களிடமும் உயிராயும், உயிர்க்குயிராயும் ஊடுருவிக் கலந்து நின்றும், உலகத்தை நடத்தி வைக்கின்றார் என ஏற்படுகிறது.

பகவத்கீதையில் கூறப்பட்டிருக்கும்

𑌅𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌶𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
। 𑌯𑌶𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌬𑍀𑌜𑌂 𑌤𑌦𑌹𑌮𑌰𑍍𑌜𑍁𑌨
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌜𑍍𑌞𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌸𑌰𑍍𑌵𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌭𑌾𑌰𑌤 ।
𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌹𑍃𑌦𑍍𑌦𑍇𑌶𑍇𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।
𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍂𑌢𑌾𑌨𑌿 𑌮𑌾𑌯𑌯𑌾 ॥

என்னும் வாக்கியங்கள் இங்கு கவனிக்கதக்கவை. இனி அடுத்த சூத்திரத்தை ஆராய்வாம்.

ஒருவன் கற்ற கல்விக்கு அழகாவது அவன்கற்றநூல்களில் கூறப்பட்டுள்ளபடி நடத்தலே யாகையால், சாஸ்திர ஆராய்ச்சியால் கடவுள் ஒருவர் உண்டென்றும் அவர்தாம் உலகத்தையும் தம்மையும் படைத்தவரென்றும் தெரிந்துகொண்டவன் அக்கடவுளைத் தொழல் வேண்டும். ஏன் அப்படி தொழவேண்டுமெனிலோ அவர் நமக்குச் செய்திருக்கும் உபகாரத்திற்காக. அவர்நமக்கு என்ன உபகாரம் செய்திருக்கிறார்? உலகத்திலுள்ள எவ்வெப்பொருள்களால் நாம் சுகமாகஜீவித்து உயிர்வாழ்கின்றோமோ அப்பொருள்கள் யாவற்றையும் நமக்கேற்படுத்திக் கொடுத்திருப்பவர் அவரே. ஜீவர்களாகிய நாம் குடியிருப்பதற்காக மூடக்க

வும் நீட்டவும், வளையவும் நிமிரவும், ஓடவும் நிற்கவும் இன்னும் நம் இஷ்டம்போல் உபயோகிக்கத்தகுந்ததாக மாமிசத்தாற் சுவர் எழுப்பி எலும்புகளாற் தூண் உத்திரம் முதலியவைகளையும் நவத்துவாரங்களாகிய வாயில் பலகணிமுதலியவைகளையும் அவ்வாயில்கட்குத் தக்க கபாடங்களையும் அமைத்து மேடுபள்ளமில்லாமல் தசைகளாலும் சர்மங்களாலும் மேல்பூசி, உரோமங்களாற் கூறைமேய்ந்து சரீரமாகிய வீட்டை இவ்வளவு சௌகரியங்களோடு கட்டிக்கொடுத்திருப்பவர் அவர் அன்றோ? இத்தகைய கருணை வள்ளலாகிய அவருக்கு நன்றிபாராட்டவேண்டியது நம்முடைய கடமையல்லவா? சாதாரணமாக அற்ப உபகாரமொன்றை எவனாவது நமக்குச் செய்வானாயின் அதற்காக அவனுக்கு நாம் நன்றி பாராட்டுகிறோம். அப்படியிருக்க மகத்தான உபகாரத்தைச் செய்திருப்பவராகிய கடவுளுக்கு நன்றி பாராட்டவேண்டியது நியாயமல்லவா? ஆகையால் தான் நாயனார்:—

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ னற்றாடொழா
அரெனின்" எனக் கூறினார்.

இதில் "வாலறிவன்" என்றதனால் கடவுள்தான் உண்மையான அறிவுடையவரென்றும் ஜீவர்களாகிய நாம் உண்மையறிவில்லாதவர்களென்றும் ஏற்படுகிறது. சர்வமத சாஸ்திரங்களின் கருத்தும் இதுவே. நாம் உண்மையறிவையடைய வேண்டுமானால், அதைக் கடவுளிடத்திலிருந்தே அவரது கிருபையால் பெறவேண்டும். அவர்தான் சர்வக்ஞத்துவமுடையவர். நாமெல்லோரும் கிஞ்சிக்ஞர்கள். அதையடைவதெப்படி? அவருடைய பாதங்களைத் தொழுவதால் தான்.

கீதையில்:—

𑌦𑍈𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌗𑍁𑌣𑌮𑌯𑍀 𑌮𑌮 𑌮𑌾𑌯𑌾 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌾 |
𑌮𑌾𑌮𑍇𑌵 𑌯𑍇 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌤𑌾𑌂 𑌤𑌰𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇 ||
𑌤𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌚𑍍𑌛 𑌸𑌰𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌭𑌾𑌰𑌤 |
𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌮𑍍 ||

எனக் கூறியிருக்கிறார். அதாவது உலகப்பற்றை (நான், எனது என்பவற்றை) விட்டு என்னைச் சரணமடைவாயின் நான் உன்னைச் சனனமரணமாகிற பந்தத்திலிருந்து விலக்கி விடுகிறேன், அதாவது உண்மையறிவை உனக்குக்கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் நாம் கற்ற கல்வியின் பயன் கடவுளைத் தொழுது அவரது கிருபையால் ஞானத்தைப் பெறவேண்டு மென்பதே.

முதல் இரண்டு குறட்பாக்களிற் கூறியுள்ளபடி கடவுள் ஒருவர் உண்டு என்று அறிந்து அவரைத் தொழுவதற்கு ஒருவன் தன்னைத் தயார்செய்து கொள்ளும் பொழுது அவனுக்குச் சில சந்தேகங்களுண்டாகின்றன. அதாவது கடவுளை எந்த இடத்தில் தொழுகிறது? அவர் அரூபி என்று சொல்லப்படுகிறதே, அவரை எந்த ரூபமாகத் தொழுகிறது? நான் தொழ ஆரம்பித்தால் அவர் அங்கு வருவாரா? என்பவைகளே.

இவ்வித ஐயவினாக்களுக்கு விடையாகவே அடுத்த சூத்திரத்தை

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்"

என இசைத்துளார் என்று ஊகிக்க இடமுண்டாகிறது. அதாவது அன்பரது நெஞ்சமாகிய தாமரைமலரின் கண்ணே சென்று அவரது மாட்சிமைப்பட்ட பாதங்களை இடைவிடாது சிந்தித்தவர் மேலுலகத்தில் நீண்ட காலம் வாழ்வார்கள் என்பதாம்.

இதனால் முதலில் கடவுளிடம் அன்பு * (பக்தி) வேண்டும் எனத் தெரிகிறது. ஏனெனில் அன்புள்ளவன்தான்

---

* அன்புக்குப் பல பெயர்களுள. அன்பைத் தனக்கு மேற்பட்டவரிடம் செலுத்தும் போது அதற்குப் பக்தியென்றும், தனக்குச் சமமாயுள்ளவரிடம் செலுத்தும் போது சிநேக மென்றும், கீழானவர்களிடம் செலுத்தும் போது கருணை அல்லது கிருபையென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் பொதுவில் எல்லாம் அன்பே.

தனக்குள்ள சகலப்பற்றுக்களையும் ஒழிக்கக்கூடும். உலகத்தில் தியாகிகளாயுள்ளவர்கள் இரப்பவர்களுக்கு எதற்காகக் கொடுக்கிறார்கள்? அவர்கள் வறுமையால் பீடிக்கப்படுவதைக்குறித்து அவர்களிடத்துண்டாகும் கருணையாலன்றோ? பெற்றோர்கள் எவ்விதமாகக் கஷ்டபட்டபோதிலும் தம் குழந்தைகளை ஏன் கஷ்டத்திற்குள்ளாகாமற் பாதுகாக்கிறார்கள்? அவர்களிடமிருக்கும் உள்ளன்பினாலல்லவா? அத்தகைய பெற்றோர்கள் தம் சுகத்தைக் கவனிக்கின்றார்களா? தம் நாட்டின் பொருட்டும் தேசத்தின் பொருட்டும் உலகத்தின் பொருட்டும் பாடுபடுகிறவர்கள் தமது சுகதுக்கங்களை கவனிக்கிறார்களா? எதற்காக அப்படி பாடுபடுகிறார்கள்? உலகத்தாரிடமுள்ள அன்பினாலல்லவா? அன்புடைமை யென்னும் அத்யாயத்தில் நாயனார் "அன்புடையர் என்புமுரியர் பிறர்க்கு" எனக் கூறவில்லையா?

ஆகையால் நாம் கடவுளை அறியவிரும்புவோமானால் நமது சுகதுக்கங்களைத் தள்ளவேண்டும். எப்போது நாம் அவர் பொருட்டு அவ்விதம் செய்ய ஆரம்பிக்கிறோமோ அப்போது அவரிடம் பக்தியுள்ளவர்களாகிவிடுகிறோம். அப்போது தான் அன்புசொரூபமாயும் சர்வ வியாபகராயும் சர்வ ஜீவராசிகளிடத்தும் குறைவற விளங்கும் அவரை நாம் அறிய முடியும்.

இரண்டாவதாக கடவுளை நாம் ஹிருதயத்தில் தியானிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. கடவுள் சகல பிராணிகளினுடைய ஹிருதயத்தையும் தனக்கிருப்பிடமாகக் கொண்டவர் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அவரை அடையவேண்டுமானால் அவர் முக்கியமாக வசிக்கும் இடமாகிய ஹிருதயத்தில் அவரைத் தியானிக்கவேண்டும். அன்றியும் அவரை ரூபத்தோடு அதாவது அவருக்கு ஒரு உருவத்தை ஏற்படுத்தி தியானிக்கிறதா அல்லது அரூபியாகத் தியானிக்கிறதா? என்பதில் சகுண

மாகத்தியானிப்பதே சிரேஷ்டம் என்றும் நிர்க்குணமாகத் தியானிப்பது கஷ்டம் என்பதாகவும், பகவத் கீதை 12வது அத்தியாயத்திலும் மற்ற நூல்களிலும்சொல்லப்படுவதோடு நாயனார் அந்தச் சூத்திரத்தில் அமைந்திருக்கும் "ஏகி னன்," "அடி" என்னும் பதங்கள் கால், கைமுதலிய அவயவங்களோடு கூடிய ரூபத்தையே சுட்டுவதால் சகுணமாகத்தான் தியானிக்கவேண்டுமென நம்பவேண்டியிருக்கிறது.

அடுத்ததாக அவரை இன்ன ரூபமாகத்தான் தியானிக்கவேண்டுமென்றும் வறுதி ஒன்றுமில்லை. அவருடைய பல மூர்த்தங்களில் எவரெவருக்கு எங்கெந்த மூர்த்தத்தினிடம் மனம் நாடுகிறதோ அவைகள் ரூபமாக அவரைத் தியானிக்கலாம். உலகத்தில் காணப்படும் சர்வமும் கடவுளின் சொரூபமே. அவர் எல்லா உருவங்களிலும் நிறைந்திருக்கிறார். அவருடைய வியாபகம் எந்த உருவத்தினிடமாவது சிறிது குறைவுபடுமாயின் உடனே அது நாசமாகிவிடும். பக்தர்கள் (அடியார்கள்) ரூபமாகவும் அவரைத் தியானிக்கலாம். ஆனது பற்றியே உரையாசிரியர் பரிமேலழகர் "அன்பால் நினைந்தவரது உள்ளத்தின் கண் அவர் நினைந்தவடிவொடு சேர்ந்தவன்" என்று கூறினர்.

யெயயாரோம் ஜ்ரவஜ்ஞெ தாம ஸ்தமெவலஜாத்ஹம் ।

அதாவது எவனெவன் எங்கெந்த ரூபமாக என்னைத் தியானிக்கிறானோ அவனை நான் அந்தந்த ரூபமாகவேயிருந்து காப்பாற்றுகிறேன் என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறியிருக்கிறார்.

அப்படித் தியானித்தால் கடவுள் அங்கே வருவாரா என்ற சந்தேகம் வேண்டாம். ஏனெனில் அச்சூத்திரத்தை நன்றாகக் கவனிப்போமாயின் இவ்விதசந்தேகங்களுக்கே இடமில்லை. அதில் "மலர்மிசை ஏகினன்" என்று கூறியிருக்கிறார் அதாவது "அன்பால் நினைவாரது உள்ளத்தின் கண்ணே அவர் நினைந்தவடிவொடுசேர்ந்தவன்" என்பதினால்

நிச்சயமாக வருவார் என்று ஏற்படுகிறது. சாதாரணமாக யாராவதொருவர் ஒருகாரியத்தைக்குறித்து நம்மை நோக்கி "அதைச்செய்து விட்டீர்களா" வென்று வினவினால் நாம் அதைச்செய்ய ஆரம்பிக்கும்போதே "இதோ முடித்துவிட்டேன்" என்று பதிலளிக்கிறோம். ஏனெனில் அந்தக்காரியம் சீக்கிரம் முடியும், அதை நாம் செய்து முடிப்பது திண்ணம் என்னும் நிச்சய புத்தியால் அவ்விதமான பதில் நம்மிடமிருந்து ஏற்படுகிறது. கடவுளை ஒருவன் பக்தியுடன் தன் ஹிருதயத்தில் தொழுதால் நிச்சயமாக அவர் அங்கே வருவார் என்பதைக் குறிப்பிட்டுத்தான் நாயனார் "ஏகினான்" என இறந்த காலத்தில் பதப்பிரயோகம் செய்திருக்கிறார். பரிமேலழகரும் "விரைந்து சென்றவன்" எனக் கூறினர்.

அப்படித்தியானிப்பதால் வரும் லாபமென்னவெனில் உண்மையறிவுடையவர்களாகி "நிலமிசை" அதாவது மேலுலகத்தில் "நீடுவாழ்வார்கள்" என்பதே.

ஒருவன் 'ஐயா! எனக்கு மேலுலகத்தில் இச்சையில்லை. இவ்வுலகமே போதும் மேலுலகம். ஒன்றிருப்பினும் அஃதெப்படிப்பட்டதோ அறிகிலேன். அவ்வுலகவாழ்க்கையால் வருவது இன்பமோ துன்பமோ தெரியாது' என்று சொல்லுவானாயின் அவ்வித சங்கைகளை எல்லாம் நிவர்த்திக்குமாறே "நிலமிசை நீடுவாழ்வர்" என்று கூறினர். "நிலமிசை" என்னும்பதத்தை மிசைநிலம் என்று கொள்வோமாயின், மேலான உலகம் என்று பொருளாகிறது. எப்போது அதை மேலான உலகம் என்று குறிக்கப்படுகிறதோ அப்போது நாம் வசிக்கும் இவ்வுலகத்தைக் கீழான உலகமென்றே கொள்ளவேண்டும். கீழான உலகத்திலுள்ள விஷயங்களே நமக்கு மிக்க இன்பத்தை விளைவிப்பவையாயிருக்கும் போது மேலானதாகக் கொள்ளப்படும் அவ்வுலகப் பொருள்கள், இதைவிடப் பன்மடங்கதிகமான இன்பத்தைப் பயக்கத்தக்கனவென்று ஏற்படுவதோடு, நீடு

வாழ்வார் என்னும் பதத்தால் இவ்வுலக வாழ்க்கையைப் போன்று அவ்வுலக வாழ்க்கையானது அழிவுள்ளதன்று என நம்பவேண்டியிருக்கிறது.

மேற் சொன்ன மூன்று குறட்பாக்களின் பயனாக கடவுள் ஒருவர் உண்டு, அவர்தான் நம்மையும் உலகத்தையும் சிருஷ்டித்தவர், அவரை நம்முடைய ஹிருதயத்தில் அன்போடு தியானிக்கவேண்டும். அப்படி தியானித்தால் உண்மையறிவுடையவர்களாகி மேலுலகத்தில் நீண்டகாலம் வாழலாம் எனத் தெரிகிறது.

"நல்லது நீங்கள் சொல்லுகிறபடி கடவுளை நான் ஹிருதயத்தில் தியானஞ் செய்கிறேன், கடவுளும் நான் நினைத்த வடிவோடு வந்து சேருகிறார். ஆனால் அவருக்கு என் பேரில் அன்புண்டாகுமா? அவர் என்னிடம் கிருபையுள்ளவராயிருப்பாரா? அப்படிப் பக்ஷமுள்ளவராயிருப்பாரென்பதென்ன நிச்சயம்? ஏன் என் பேரில் அவருக்கு வெறுப்புண்டாகக்கூடாது? சுகமாக எங்கும் திரியும் ஒருவரை நிர்ப்பந்தப்படுத்தி இழுத்து ஹிருதயமாகிய குகைக்குள் போட்டு அடைத்து வைத்தால் அவருக்கு வெறுப்புண்டாகக்கூடியது சகஜம் தானே?" என்று ஒருவன் கேட்பானாயின், அவைகளுக்கு பதிலை அடுத்த சூத்திரத்தில்

"வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
கியாண்டுமிடும்பையில"

எனக் கூறியிருக்கிறார்.

அதாவது (உலகத்தில்) எந்த வஸ்துவினிடமும் விருப்பும் வெறுப்பும் அற்றவரான கடவுளின் பாதங்களைத்தொழுதவர்களுக்கு ஒருக்காலும் பிறவித்துன்பங்கள் உண்டாகா என்பதாம். இதனால் கடவுள் ஒருவரிடத்தும் விருப்பு வெறுப்பற்றவர் எனத் தெரிகிறது. விருப்பும் வெறுப்பும் இல்லாவிட்டால் அவர் என்னிடமும் அப்படித்தானே இருப்பார். அவரெனக்கென்ன பயன் அளிக்கப்போகிறார் எனில், கடவுளுக்கு ஒரு பொருளினிடமும் விருப்பு வெறுப்பில்லையென்பதுண்மை. ஒரு நெல்லை விதைத்தால் ஒரு பிடி நெல் விளைவதைப்போலவும் திக்குச்சியைக் கொ

ளுத்தி தீவர்த்திஸைபப்பற்றவைப் பதைப் போலவும் முதலில் நாம் அவரிடம் அன்பு பாராட்டுவோமாயின் நம்முடைய அற்ப அன்பானது அவரிடமிருக்கும் பேரன்பை நம்மை நோக்கிப் பிரவகிக்கச் செய்யும். அவர் சர்வ ஜீவராசிகளிடத்தும் பாரபக்ஷமின்றி குறைவற விளங்குபவர். ஆனதால் அவர் தாமாகவே ஒருவருக்கும் துன்பத்தையாவது இன்பத்தையாவது உண்டுபண்ணுகிறதில்லை. அவரவர்கள் செய்யும் நல்வினை தீவினைகளையும், அவரவர்கள் செய்திருக்கும் இருவினைகளுக்கீடாக அவரவர்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களையும் சாக்ஷிபாக நின்று பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் ஒருவனை இதைச் செய்யென்று தூண்டுகிறதுமில்லை, செய்யாதே யென்று தடுப்பது மில்லை. நாம் அவரிடம் அன்பு பாராட்டுவோமாயின் அவரும் நம்மிடம் அன்பு பாராட்டுகிறார். நாம் அவர் வேலையைச் செய்வோமாயின் அவர் நம்முடைய வேலையைத் தலைப்பொறுப்பாகச் செய்கிறார். வீதியைச் சுத்தம் செய்யும் வேலையிலமர்ந்திருந்தவனும் இழிபிறப்பாளனுமாகிய தன் பக்தன் தன்னைத்தியானித்துக்கொண்டிருந்த நிமித்தம் அவன் செய்யவேண்டிய வேலையை மறந்து விட்டமையால் கடவுள் அவனுக்காக அவ்வேலையைச் செய்து முடித்தார் என்பதாக பக்தர்களின் சரித்திரங்கள் கூறுகின்றன. ஆனதால் தான் அவருக்கு அடியார்க் கடியான், தொண்டருக்குத் தொண்டன், தாசனுக்குத் தாசன், பக்த ரக்ஷகன் எனப் பல நாமங்கள் வழங்குகின்றன. ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில்

அநந்யாஸ்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே ।
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ॥

என்று கூறுவதும் இதுவே.

அப்படியே யிருக்கட்டும். நாம் விருப்பு வெறுப்பற்றவராகிய கடவுளைத் தியானிப்பதாக வைத்துக்கொள்வோம். அதனால் நமக்கேற்படும் பயனென்னவெனில் "யாண்டும் இடும்பையில" பிறவித்துன்பங்கள் அதாவது ஜனன மர

ணங்கள் உண்டாகவே மாட்டா. எவ்விதமெனில் நாம் தியானிக்கும் கடவுள் எப்படிப்பட்டவர்? "வேண்டுதல் வேண்டாமையிலான்." அப்படிப்பட்டவரை இடைவிடாது தியானிப்பதால் நாமும் அவரைப்போல் ஒரு பொருளினிடத்தும் விருப்பு வெறுப்பில்லாதவர்களாய் விடுவோம். எப்போது நமக்கு ஆசை நீங்கிவிடுகிறதோ அப்போது துக்க நிவர்த்தியுண்டாம். அதாவது பிறவித்துன்பமில்லை.

இதுவரை கூறிவந்த விஷயங்களால் உலகத்தையும் நம்மையும் சிருஷ்டித்தவர் கடவுள், நாம் கற்ற கல்விக்கும் நமக்கேற்பட்டிருக்கும் அறிவுக்கும் பயனுக அவரை நாம் தொழவேண்டும், அப்படித் தொழுவதிலும் அந்தர்முகமாக நம்முடைய ஹிருதயத்தில் அவரைத் தியானிக்கவேண்டும். இன்ன ரூபமாகத்தான் தியானிக்கவேண்டும் என்னும் வறுதியில்லை, எந்த ரூபமாகவும் தியானிக்கலாம், அவர் விருப்பு வெறுப்பற்றவர் அவருக்கு நம்மிடம் கருணை ஏற்படவேண்டுமானல் நாம் முதலில் அவரிடம் நம்முடைய சிற்றன்பைச் செலுத்தி அவரிடமுள்ள பேரன்புக்குப் பாத்திரர்களாகவேண்டும், அவரிடம் பக்தி பாராட்டுவதால் நம்மிடமுள்ள கெட்ட குணங்களாகிய விருப்பு வெறுப்புக்கள் அற்றுப்போய் பிறவித்துன்பத்திலிருந்து விடுபடுவோம் என விளங்குகிறது.

(இன்னும் வரும்)

எம். ஸ்வாமிநாத ஐயர்.

---

# பகவத் கீதா சுலோகங்கள்.

உத்தரேதாத்மநாத்மாநம்

"தானே தன்னை மேன்மைப் படுத்திக்கொள்ள வேண்டும்."

உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத் ।
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்துராத்மைவ ரிபுராத்மந: ॥

பகவத் கீதை-௬-5.

தன்னைத்தானே மேன்மைப்படுத்திக் கொள்ளவேண்டும். தன்னைத் தானே சிறுமைப் படுத்திக்கொள்ளலாகாது. தனக்குத் தானே பந்து. தனக்குத் தானே பகைவன்.

இதனால் முக்கியமாய் நாம் அறிவதாவது-ஒவ்வொருவனும் தன்வினைப் பயனை இம்மையிலாவது அல்லது மறுமையிலாவது அடைகிறான். 'அரசன் அன்று கெடுப்பான் தெய்வம் நின்று கெடுக்கும்' 'கொலை செய்த கைகழுவக் கடல் முழுதும் போதாது' (The whole sea cannot wash the murderer's hand.) கர்மமே ஒவ்வொருவனுடைய நிலைமைக்கும் காரணம் என்பது நமது சித்தாந்தமல்லவா? ஆனால் அதிருஷ்டம், தற்செயலாய் உண்டாதல், என்பதுண்டா? இல்லையா? சில சமயங்களில் 'நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது' என்று சொல்லுகிறபடி, நல்லவன் துன்பமடைவதையும், தீயவன் யாதொரு கஷ்டமுமில்லாது சுகமாய் வாழ்வதையும் உலகத்தில் காண்கிறோம். 'விதியை மதியால் வெல்ல முடியுமா' என்று சொல்லுகிறபடி எவ்வளவோ சாமர்த்தியமாய் நாம் முயற்சி செய்தபோதிலும் அது கைகூடாமல் போவதில்லையா? என்ற சங்கைகள் ஏற்படலாம். ஆம், இவையெல்லாம் உண்மைதான். ஆயினும், ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வோமாகில் 'தற்செயலாய்ச் சம்பவித்தன' என்று சொல்லப்படுவனவற்றில் பெரும்பான்மை சாதாரண புத்திக்கெட்டாத சில காரணங்களாலேயே நேர்ந்திருக்கின்றனவென்று வெளியாகும்.

விசேஷப் பொருள்:—இதில் ஆத்மா என்பது ஆத்மாவைக் குறிக்கும். ஆகையால் ஒருவன் ஜனனமரணங்களினின்றும் விலகி மோக்ஷமடைவது தன் முயற்சியாலேயேதான் ஆகவேண்டுமென்பதேயாம்.

> "தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
> தானே தனக்கு மறுமையு மிம்மையும்
> தானே தான் செய்தவினைப் பயனறுத் தலால்
> தானே தனக்குக் கரி." அறநெறிச்சாரம்

விநா புருஷகாரேண தைவமத்ர ந திஷ்டதி

மனிதன் முயற்சியில்லாமல் தெய்வம் ஒன்றும் செய்வதில்லை.

'God helps those who help themselves'

தன்னுதவி யுள்ளோருக்குத் தான் தெய்வமும் உதவி செய்யும்.

ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பஶ்யதி யோऽர்ஜுந।
ஸுகம் வா யதி வா து:கம் ஸ யோகீ பரமோ மத:॥

பகவத்கீதை-சு-32.

அர்ஜுனா! சுகமோ, துக்கமோ, தன்னைப்போல் எல்லோரையும் சமமாக எவன் பாவிக்கிறனே அவன்தான் பரமயோகி என்று மதிக்கப்படுவான்.

தன்னைப்போல் பிறரையும் பார்க்கவேண்டுமென்பது இதன் கருத்து. ஒவ்வொருவனும் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய ப்ரவிர்த்திக்கும்போது செய்யலாமா செய்யலாகாதா என்ற சங்கை அடிக்கடி ஏற்படுகின்றது. இதை எப்படித் தீர்மானிப்பது? மனிதரின் காலதேச வர்த்தமானங்களுக்குத் தககவாறு தர்மம், அதர்மம், நியாயம், அநியாயம் என்பவை வித்யாசப்படுகின்றன. ஒருவனுக்குத் தர்மமாயும் நியாயமாயும் தோன்றுவது இன்னொருவனுக்கு அதர்மமாயும் அநியாயமாயும் தோன்றும். 'எனக்குப் பிடித்ததெல்லாம் நியாயம், பிடிக்காததெல்லாம் அநியாயந்தான்' என்று ஒரு யுக்திவாதி வேடிக்கையாய்ச் சொன்னர். இக்கொள்கையை வாயால் ஒப்புக்கொள்ளத் தயாராய் இல்லாவிடினும் அநேகரின் விவஹாரங்களும், நடபடிக்கைகளும் இதை அனுசரித்தே இருக்கின்றன. 'பலந்தான் தர்மமெனகிறுன்' வலியோன். 'தர்மந்தான்

பலம்' என்கிருன் மெலியோன். இந்த மெலியோனே தன்னிலும் மெலியோனை நோக்கி 'பலந்தான் தர்ம'மென்று சாதிக்கின்றுன். இதை எப்படித் தீர்மானிப்பது? ஆகையால தர்மாதர்மம் நியாயான்யாயம் பாரமார்த்திகமா (Absolute) அல்லது வ்யாவஹாரிகமா (Relative) என்ற கேள்வி ஏற்படுகின்றது. உலகம் தோன்றிய காலம் முதல் இந்தவிவஹாரமானது பெரிய புத்திமான்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. ஒரு முடிவுக்கும் வரவில்லை. உலகம் முடிந்தாலும் முடியுமேயொழிய இவ்விதவாதம் முடியப்போகிறதில்லை. சற்று கவனித்துப் பார்த்தால், தர்மாதர்மம் நியாயான்யாயம் என்பது வ்யாவஹாரிகமென்றே நன்குய் விளங்கும். ஆயினும், தினந்தோறும் ஏற்படும் எண்ணிறந்த விவஹாரங்களை ஒருவிதமாய் முடிவு செய்யவேண்டுமே! அதற்காகப் பல மஹான்கள் பல விதிகள் கூறியிருக்கின்ருர்கள். அவைகளில் இந்த கீதா மஹா வாக்கியமானது ஓர் சிறந்த வாக்கியம். அதாவது பிறனுக்கு இன்பமோ துன்பமோ ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது தன்னையே ஒரு திருஷ்டாந்தமாய்க் கொள். அதாவது தனனைப் பிறன் ஸ்தானத்திலும் பிறனைத் தன் ஸ்தானதிலும் மாற்றி வைத்துக்கொண்டு ஆலோசித்துப் பார். நாம் செய்ய உத்தேசித்திருக்கும் காரியத்தைப் பிறன் நமக்குச் செய்தால் நாம் திருப்திப் படுவோமா அல்லது வருத்தப்படுவோமா என்று உனக்குள்ளேயே கேட்டுக்கொள். திருப்திப் படுவாய் என்று தோன்றினுல் அக்காரியத்தைச் செய். இல்லாவிட்டால் அதைச் செய்யாதே என்பதுதான் இதன் முக்கிய கருத்து. இவ்விதி அநேகமாய் நமது நடபடிக்கைகளில் பெரும்பான்மையை நல்வழிப் படுத்துமென்பதில் ஐயமேயில்லை.

ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பச்யதி

தன்னைப்போல் எல்லோரையும் எவன் பாவிக்கிருனே அவன் தான் நனருய் அறிந்தவன.

'Do unto others as you would be done by.'

உனக்குப் பிறர் என்ன செய்யவேண்டுமென்று எண்ணுகிருயோ அவ்வாறே நீயும் அவர்களுக்குச் செய்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,

பி. ஏ. பி. எல்

## ரவீந்திரநாத் டாகோரின் சரித்திரம். *

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஸூர்யனைக் கண்ட மாத்திரத்தில் தாமரைப் புஷ்பம் மலர்ந்து தன் வாசனை முழுவதையு மனமுவந்து சூர்ய னுக்கு அர்ப்பணம் செய்கின்றது. நானோ பனி காலத்து மூடு பனியில் மலராத மொட்டைப்போல் விகஸியாமலி ருக்கிறேனே" என்று ஏங்குகிறார்.

இந்த பாடல்கள் இகத்தைக் குறித்தன வென்றாவது பரத்தைக் குறித்தன வென்றாவது யார் சொல்லுவார்? இவைகளில் கூறப்பட்ட அன்பானது மானுஷிகமா அல் லது தெய்விகமா? இரண்டுமென்றே சொல்லுவோம். அன்பு முதிர்ந்து தன்னையே சிருஷ்டிப் பொருள்களுக்கு அர்ப் பணம் செய்யும் குணமே தெய்விகமாகும். இதுவே எண் ணுக் கடங்காத இந்திய மஹான்களின் பல்லவியாகும் இதுவே, ரவீந்தர நாதரின் பல்லவியாயு மிருக்கிறது.

நமது ரவீந்தர நாதர் இந்திய ஜாதியருக்கென்றே வித்யாஸம், விகற்பம், இல்லாமல் உபதேசிக்கும் குரு ஆவர். ஜனங்கள் பாஷை இருப்பிடம் முதலியவற்றால் வேறுபட்டிருப்பினும், ஒரு தேசத்தாராய், ஒரே சுபாவத் தாராய்ச் சேரும்படியான அறிவை ஊட்டுகின்ற அனந்தம் பாடல்கள் பாடியிருக்கிறார். புராதன கவிகள் உருக்கமாய் பாடியதுபோல இவரும் தமது நாட்டாருக்கு "இந்திய மா தாவின்" சிறப்பைப் பற்றி பாடல்கள் மூலம் எடுத்தும் காட்டியிருக்கிறார். கீதாஞ்சலியில் "தேசத்தை யாளும் ராஜனே என் தாய்; தேசத்து ராணியே என் தாய்" என் றும் "நான் இந்தியாவில் பிறக்கும்படி அருளியதற்காக கடவுளுக்கு வந்தனம்" என்கிறார்.

---

* "Herald of the Star" நக்ஷத்திர தூதன் என்ற ஆங்கில மாதாந்தப்பத்திரிகையின் 1915ஞு ஆகஸ்டுமீ சஞ்சிகையில் ஹரேந் திரநாத மைத்ரா எழுதிய வியாசத்திலிருந்து எடுத்தெழுதியது.

இந்துக்களின் ஜன்ம தேசத்தில் ஜனித்ததற்காக தமக்கு அதிக கௌரவம் உண்டென்கிறார். இங்கே மாந்தோப்பின் நிழலில் படுத்துறங்குவதிலும், கங்கா நதியின் நீரோட்டத்தின் சுருதிக்கு ஏற்ப பாடல்களைப் பாடுவதிலும் தனது கவிதைக்கே காரண பூதமான கபடமற்ற பொது ஜனங்களின் மத்தியில் நாட்களைப் போக்குவதிலும், மிகுந்த பாக்கியம் வேறில்லையென்று சந்தோஷிக்கிறார்.

வங்காள தேசத்தில் புதிய உணர்வை ஊட்டியவரும் வேறுபாடுள்ள இந்தியர்களை ஒன்றாக்கியவரும் இவரே; இது காரணம் பற்றியே, வங்காளிகளும் மற்றவர்களும் இவரை பாரத வர்ஷத்தின் ஐக்கியோபதேசகர் என்று கொண்டாடுகிறார்கள். இவர் கவியாகவும் குருவாகவும் விளங்குகிறார். வங்காள தேசத்தில் புதிய ஊக்கம் உண்டாகும் முன்பு, தம்முடைய வாக்கின் அபாரமான மாஹாத்மியத்தால், அற்புதமான எண்ணங்களின் கிளர்ச்சியை உண்டாக்கி, வங்காளிகளை முற்றிலும் புதுப்பித்திருக்கிறார். இவருடைய தேசாபிமானத்தால், ஜனங்களுடைய மனதை ஒருமைப்படுத்துகிறார். "ஒரு நாட்டார் ஒருமைப்படுவது தங்கள் முயற்சியால் தான்" என்று சொல்லுகிறார்.

கொஞ்ச காலமாக, இவரது "சாந்திநிகேதனம்" என்னும் ஆச்ரமம் ஜனங்கள் கவனத்தை இழுக்கிறது. இவ்வாச்ரமம், கல்கத்தாவிலிருந்து சுமார் 50 மைல் தூரத்திலுள்ளது. இங்கே இவரது சிஷ்யர்களுடன் வசித்து வருகிறார். சுமார் இரண்டு வருஷங்களுக்கு முந்தி மேனாடு போயிருந்த காலத்தில் "நான் என் சிஷ்யர்களுடன் சேர்ந்திருக்கப் பிரியப்படுகிறேன்" என்று அடிக்கடி சொல்லுவார். இவரை "எங்கள் குரு" என்று சிஷ்யர்கள் அழைக்கிறார்கள். இவரைத் தரிசிக்கப்போன ஒருவர் கூறுகிறார்:—

"இவரது ஆச்ரமத்தைப் பார்க்கப் போகவில்லை. இவரையே பார்க்கப் போயிருந்தேன். நான் மாலை நேரங்களில் தான் இவரைப் பார்க்கப் போவேன். அங்கே, மிகவும்

காடு முரடான ஆஸனத்தில் அமர்ந்து, தம்மைச் சுற்றித் தமது சீஷர்களையும் தமது உதவி உபாத்யாயர்களையும் சூழ விருத்திக்கொள்வார். அவர்கள் வெகு ஆசையோடு பல சந்தேகங்களைப் பற்றிக் கேட்டுத் தெளிவார்கள். நான் போயிருந்த காலத்தில், பாடம் கேட்கும் நேரமல்ல. சில பேர் மாத்திரம் அவரைச் சுற்றி நின்றார்கள். ரவீந்தர நாதர் உபநிஷத்துக்களின் மஹத்தான சத்யங்களை விளக்கிக் காட்டினார். இதைப் பார்த்தவுடனே, நமது ப்ராசீன ரிஷிகளுடைய ஆச்ரமங்களும் அவர்கள் போதனா முறைகளும் என் ஞாபகத்துக்கு வந்தன. விசாலமான ஆகாயத்தில் இரண்டொரு நக்ஷத்திரம் காணப்பட்டது. "சாந்தி நிகேதனமாகிய அவ்வாச்ரமத்திலுள்ள மரங்களின்மேல் பல விதமான பறவைகள் அமர்ந்திருந்தன. மாலதி, மல்லிகை முதலிய இரவில் புஷ்பிக்கும் மலர்கள் மலர்ந்து எங்கும் தங்கள் வாசனையைப் பரவச் செய்தன." புராதனமான இந்துக்களின் போதனா முறையை இந்த சாந்தி நிகேதனத்திலன்றோ அநுசரிக்கிறார்கள்.

"ஒரு ஆலம் பழத்தைக் கொண்டுவா" என்று குரு நாதர் தமது சீஷனொருவனுக்குச் சொன்னார். கொணர்ந்தவுடன் "அதைப் பிட்டுப்பார். அதில் என்ன இருக்கிறது? சொல்" என்று கேட்டார். "மீன் முட்டையினும் மிகச் சிறிய விதைகள் இருக்கின்றன" என்று சீஷன் பதில்சொன்னான். அவைகளில் ஒரு விதையை நசுக்கிப் பார், உள்ளபடி சொல்" என்றார். நசுக்கின பிறகு "ஒன்றும் தென்படவில்லை" யென்றான் சீஷன். குருநாதர் சொல்லுகிறார். "சரி உன் கண்ணுக்கும் என் கண்ணுக்கும் தென்படாத ஒரு தந்திரமுள்ள சக்தியால் இந்த மரம் வளருகிறது அல்லவா! அது போலவே ஸர்வலோகமும் நமது கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தியால் உஜ்ஜீவிக்கிறது" என்றார் குரு. இதுவே இந்த ஆச்ரமத்தின் போதனா முறை. இங்கே 200 மாணாக்கர்களும் 24 போதகர்களும் நமது குரு நாதரிட

மிருந்து இகபர சாதனங்களை அடைகிறார்கள். சாந்திநிகே தனம் ஒரு யாத்திராஸ்தலமாய்விட்டது. இப்போது இந்தியாவின் நாலு பக்கங்களிலிருந்தும் மற்றும் அயல் தேசங்களிலிருந்தும் அநேக ஜனங்களங்கு போகின்றார்கள். தமது குபேரச் செல்வத்தையும் தமக்குக்கிடைத்த 8,000 பவுன் விலையுள்ள நோவல் பரிசையும் தமது வாழ்நாட்களையும், ஒரு பொருட்டாக மதியாது, தமது நாட்டாருக்கென்று தத்தம் செய்த நமது குருநாதரைப் பலர் தரிசிக்கிறார்கள். ஒரு சிற்பி, ஒரு குயவன், அல்லது வேறொரு தொழிலாளி அச்சில் தனக்கு வேண்டிய உருவம் வார்ப்பது போல், இவர் இந்தியரின் குணத்தை, ஒரே மாதிரியாகச் செய்ய விரும்புகிறார். அதாவது இந்தியர்களுக்குப் பொதுவான உயர் நோக்கங்களை உண்டாக்க விரும்புகிறார். அப்படிச் செய்ய முயல்வதால், வேறுபாடின்றி, இந்தியர்களை ஒரு ஜாதியாராகச் சேர்க்க விரும்புகிறார். இவர் அன்பின் வழியே உயர்வழியாகக் கொண்ட ஆசிரியர்.

இந்த 200 மாணவர்களும் காலை 4 மணிக்கு எழுந்திருக்கிறார்கள். இவர்கள் உபாத்தியாயர்களோடு கடவுள் வாழ்த்துக்களைப் பாடிக்கொண்டு ஆச்ரமத்தைச் சுற்றி வருகிறார்கள். பண்டைக் காலத்து ரிஷிகளின் ஆச்ரமங்களில் நடப்பதுபோல, இவ்வாச்ரமச் சீஷர்கள் தங்களுக்கும் தங்கள் ஆசிரியர்களுக்கும் வேண்டிய முதற் கடமைகளைச் செய்வார்கள். இதற்குப்பின், ஸ்நாநம் முதலிய முடித்து மாநிழலில் தியானத்துக்குத் தனித்துப் போவார்கள். பிறகு தான் காலைச் சாப்பாடு சாப்பிடுவார்கள். ஆதிகாலந் தொட்டு, காட்டில் ரிஷிகளின் ஆச்ரமங்கள் ஏற்பட்ட காலம் முதல் இந்துக்கள் முதன்மையாகக் கற்று வந்த சாஸ்திரம் தியானக் கிரமமாகும். அதிகாலையில், நீல நிறமுள்ள ஆகாயத்தின் கீழ், பொன் நிறமான சூர்ய பிரகாசத்தில், மலர்ந்த புஷ்பங்களினூடே, த்யானம் செய்தலே கண்ணுக்கெட்டாத பரம் பொருளை அறிய இயலும் முக்கிய சாதன

மாகும். பிறகு, கொஞ்சம் உணவு எடுத்துக்கொண்டு வெவ் வேறு மர நிழலில் வீற்றிருக்கும் ஆசிரியர்களிடம் பாடங் கேட்கிறார்கள். இங்கே பத்துப் பன்னிரண்டு மணி வரையி லிருந்து படித்து பகற் சாப்பாட்டுக்குப் போகிறார்கள். பிறகு, தங்கள் அறைகளில் வேலை செய்து, பகற் பொழு தைப் போக்குவார்கள். பிறகு கொஞ்ச நேரம் விளையாடு வார்கள். மறுபடியும் ஸ்நாநம் செய்வார்கள். சாயங்காலம் தங்கள் குரு நாதரைச் சுற்றி நின்று பல விஷயங்களைக் கேட்டறிவார்கள். சுமார் 8 மணிக்கு இராப்போஜனம் செய்து கடவுளை வழிபட்டு பிறகு படுக்கைக்குப் போவார் கள். சாந்தி நிகேதனத்தின் முக்கியமான விசேஷமென்ன வென்றால், நமது குருநாதர் தமது சிஷ்யர்களுடன் அதி காலையில், ஆச்ரமத்தைச் சேர்ந்துள்ள கோவிலுக்குப் போய் மனதுருகி ஸ்தோத்ரங்கள் பாடி, அவர்கள் மனதில் பக்தி யுண்டாகும் படியாக மிகவும் மிருதுவான பாஷையில் பேசுவார்.

இவ்விதமாய் நமது குருநாதர் தமது நாட்டாருக்காக உழைத்து வருகிறார். இவரை ஆணும் பெண்ணும், உயர்ந் தோரும் தாழ்ந்தோரும், கிருஹஸ்தர்களும் ஸந்யாஸிகளும் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். மீன் பிடிக்கும் செம் படவனும், விளையாடும் குழந்தையும் இவரது பாட்டுக் களைப் பாடுகிறார்கள். வங்காள ஸந்யாஸிகள் தங்கள் வீணையில் இவரது ஸ்தோத்ரங்களை இசைத்து வரு கிறார்கள்.

இவரது ஆச்ரமத்தைப் போல் இந்தியாவில் எங்கும் பல ஆச்ரமங்கள் உண்டானால் இந்தியாவின் க்ஷேமம் நாள டைவில் விருத்தியாகுமென்பது திண்ணம்.

கே. ராகவையர்.

---

# குருக்களும் சிஷ்யர்களும். *

(13-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்த பரீக்ஷா காலத்தில், சிஷ்யனாகவேண்டுமென்று முயல்வோன் எவ்வகையிலும் குருநாதருடன் நேரான ஸம்பந்தம் பெறமுடியாது. அவர் வசனிக்கக் கேட்கவும், அவரை நேரில் தரிசிக்கவும் இப் பரீக்ஷா காலத்தில் ஒருபோதும் ஸாத்தியமில்லை. ஸாதாரணமாய் இவனைப் பரீக்ஷிப்பதற்காக எவ்வகையிலும் குருநாதர்கள் சோதனைகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தவே மாட்டார்கள். ஆனால் இவன் தன் வாழ்நாட்களில் நித்யம் சகஜமாயேற்படும் அற்ப சங்கடங்களையெல்லாம் எவ்விதம் பாவிக்கிறானென்று மட்டும் கூர்ந்து கவனிக்கிறார்கள். இதைச் சௌகர்யமாய் உற்றுக் கவனிப்பதற்கேற்றபடி இவன் காமசரீரத்தையும் மனோசரீரத்தையும் போன்ற வேறு இரண்டு சரீரங்களை நிர்மித்துத் தாம் அடிக்கடி பார்த்துக் கவனிக்கத்தக்க ஓர் ஸமீபமான இடத்தில் அவைகளை வைத்துக்கொள்வார். பிறகு, அவைகளின் மூலமாய் இவன் நிஜசரீரங்களில் ஏற்படும் மாறுதல்களனைத்தும், தந்தி யடித்தாற்போல, உடனுக்குடன் குருநாதருக்குத் தெரியவருமாறு இவன் நிஜசரீரங்களினின்று ஓர்வித ஸூக்ஷ்மமான ஸம்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்வார். ஆகவே இவன் எந்தவிதமான எண்ணத்தை மனதில் நினைப்பானாயினும், எந்தவிதமான இச்சையைக் கொள்வானாயினும், அவை அப்படியே குருநாதரிடமுள்ள பிரதிபிம்பச் சரீரங்களில் விளங்கும். இப்பிரதிபிம்பங்களைக் குருநாதர் ஒவ்வொருநாளும் உற்று நோக்கிக் கவனித்து அறிவார். இவ்விதம் இவன் இன்னின்ன எண்ணங்களை நினைக்கிறான், இன்னின்ன ஆசைகளைக் கொள்கிறான் என்பதைத் திட்டமாய்க் கண்டறிவார். இதினின்று

---

* பி. எஸ். ராமசுப்பையரால் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது.

எவனெவன் சீக்கிரம் விருத்திக்கு வரக்கூடியவன்; எக்காலத்தில் எவனைச் சிஷ்யனாக அங்கீகரிக்கலாம் என்று மிக இலகுவாய்த் தீர்மானிக்கிறார்.

ஈசுவர சக்தியானது வெளிவருதற்கு குருநாதர் தான் ஏற்ற வாய்க்காலென்பது ஞாபகமிருக்கட்டும். ஆனால் கொஞ்சமும் ஸ்வாதீனமில்லாதஓர் ஜடமான வாய்க்காலென்றெண்ணுதீர்கள். உயர்ந்த புத்தி நுட்பத்தோடு ஈசுவரனுடன் ஒத்து உழைக்கும் மஹான் என்று அறிக. ஏனெனில் குருநாதர் பூர்ண பிரக்ஞையுடன் ஈசுவரனுடைய அங்கமாகவல்லவா விளங்குகிறார். இதே மாதிரிதான் சிஷ்யனும் குருநாதருடைய ஒரு முக்ய அங்கமாயிருக்கிறான். சிஷ்யனின் மூலமாகவே குருநாதருடைய சக்திகள் லோகானுக்ரஹத்தினிமித்தம் பிரவஹிக்கின்றன. ஆகையால் சிஷ்யனும் குருநாதருடன் புத்திக்கூர்மையோடு ஒத்து உழைப்பவனாயிருக்கவேண்டும். இப்படி யிருக்கவேண்டியவன், குருநாதருடைய பிரக்ஞையில் இரண்டறக் கலந்தவனாயிருக்கவேண்டும்.

அதாவது சிஷ்யன் பார்ப்பதும் கேட்பதும் குருநாதனுடைய பிரக்ஞைக்குட்பட்டே நடக்கும். சிஷ்யன் பார்க்கிறபோதும் கேட்கிறபோதும், குருநாதரும் அதே காலத்தில் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் இருக்கிறார் என்ற கட்டாயமில்லை. ஆனால் அப்படியும் அநேக சமயங்கள் ஏற்படும். சிஷ்யன் பார்த்துக்கேட்ட விஷயங்கள் முற்றிலும் சிஷ்யனுக்கு ஞாபகத்திலிருப்பன போலவே குருநாதரின் ஞாபகத்திலும் அழுந்தியிருக்கும். சிஷ்யனுடைய எண்ணங்களும்,இச்சைகளும் குருநாதரின் மனோசரீரத்திலும், காமநாசரீரத்திலும் போய்ச் சேருகின்றன. இவ்வுண்மையைநாம் நன்குணர்ந்தால் குருவானவர் ஒருவனைச் சிஷ்யனாக ஒப்புக்கொள்வது எவ்வளவு உத்தரவாதமான காரியம் என்பது நமக்குத் தெளிவாகும். குருநாதர் தம்

மநத்தில் எவ்வித எண்ணங்களையும் இச்சைகளையுமே கொள்ள விரும்புவாரோ, அவ்வித எண்ணங்களையும் இச்சைகளையுமே சிஷ்யனுமேவோனும் கொள்கிறனென்று காணும் வரை எவரையும் சிஷ்யனுக அங்கீகரித்தல் முடியாத கார்யம்.

சிஷ்யன் சில சமயங்களில் அறிவீனத்தாலும் பலஹீனத்தாலும் குருநாதர் மநஞ்சகியாத பல எண்ணங்களையும் இச்சைகளையுங் கொள்கிறன். உடனே அவைகள் தம்மை வந்தடையாவண்ணம் குருநாதர் ஒரு தடை யேற்படுத்துகிறர். அப்போது குருநாதர் வேறு வேலையினின்று தம் கவனத்தை இதில் செலுத்தவேண்டியிருக்கிறது. இப்படி அடிக்கடி தம் கவனத்தைச் சிதறச்செய்யும் சிஷ்யர்களை அங்கீகரிப்பது, அவருடைய அரிய காலத்தையும் பலத்தையும் வீணுக்குகின்றதல்லவா? ஆகையால் சிஷ்யர்களை அங்கீகரிப்பதில் எவ்வளவு சிரமமிருக்கின்றதென்று பாருங்கள்.

இத்தகைய சிஷ்யர்களைக் குருநாதர் ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்குக் காரணம், அவர் இரக்கமற்றவ ரென்ருவது பொறுமையில்லாதவ ரென்ருவது நாம் சொல்ல இயலாது. அவருடைய சக்தியையும் காலத்தையும் வீணய்ச் செலவழிக்காமல், எப்படி மிகப்பிரயோஜனகரமாய்ச் செலவழிக்கக்கூடுமோ, அப்படிச் செய்யவேண்டியது அவர் கடமையன்றோ! எவனொருவன் தான் சிஷ்யனுக அங்கீகரிக்கப் பெறுவதற்கு யோக்யன் என்று உணருகிறனே, அவன் ஒரு நாளாவது, அன்று முழுவதும் குருநாதர் மநம் பொருத எண்ணமாவது இச்சையாவது கொள்ளாமலிருந் திருக்கிருஞ வென்பதைத் தனக்குத்தானே பரீக்ஷித்துப் பார்க்கட்டும். அப்போது தன் யோக்யதை தனக்குத் தெரியவரும். பிறருக்குத் தீங்கு கருதுகின்ற எண்ணங்களைக் கொள்ளாமலிருந்தால் மட்டும் போதாது. அல்ப எண்ணங்களையும்

குறை கூறும் புத்தியையும், குரோத புத்தியையும் கண்டிப் பாய்த் தவிர்க்கவேண்டும். நம்மில் யாருக்கு இந்த யோக் யதைகள் உள்ளனவோ, அவர் சிஷ்யனாகலாம்.

நமது குருநாதர்கள் முற்கூறிய முறையாய் சிஷ்யர்களை இவ்வளவு நுணுக்கமாய்க் கவனித்து வருவது எதற் கெனில், அவர்களுடைய சூக்ஷ்ம சரீரங்களை நேர்மைப்படு த்துவதற்கேயாம். முன்னாட்களில் இந்தியாவில் குருக்கள் தம் சிஷ்யர்களைப் பக்கத்திலுட்கார்த்திக் கொண்டே இதைக் கவனித்துவந்தார்கள். அப்யாஸ முறைகளும், படிக்கப்படும் பாடங்களும் எவ்வளவு முக்யமா யிருப்பி னும், இவைகளை விட முக்யமானது குருவின் முன்பாக உட் கார்ந்து உபதேசம் பெறுவதேயாகும். நாநாவித சஞ்சல முள்ள எண்ணங்களாலும், க்ஷணிகமான இச்சைகளாலும் சிஷ்யனுடைய ஸூக்ஷ்ம சரீரங்கள், அவைகளின் முற்பழக் கம் போல வெவ்வேறு விதமாக சலிக்கின்றன. சிஷ்யன் முதன் முதல் செய்யவேண்டிய தென்னவெனில் பற்பல குழப்பங்களால் சஞ்சலப்பட்ட காமநா சரீரத்தையும், மநோ சரீரத்தையும் ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டும். குறுகிய நோக்கங்களை அகற்றி அலையும் மநத்தை முதலில் திடப்படுத்தவேண்டும். இது பல வருடங்களாக திடசங் கல்பத்தால் முயன்று ஆகவேண்டிய விஷயம்.

சிஷ்யன் உலகில் பிரவிர்த்தி யுடையவரை மேற்கூறிய விதமான அப்பியாஸக் கிரமத்திற்கு, இடையூறுகளும், தொந்தரவுகளும், அபரிமிதமான ஆசாபாசங்களாலும், மநச் சஞ்சலத்தாலும், முன்னினும் நூறுமடங்கு அதிகரிப் பனபோல தோன்றும். தன் வசமுள்ள சக்திகளனைத்தை யும் ஒருமித்துத் தீவ்ரமாய் அந்நல்வழியை அப்யஸிக்க முயலவேத முடியாதபடி, அவ்வளவு தூரம் மநச் சஞ்சல முமடைவான். இதனால்தான் இந்தியாவில் உயர்வாழ் வை அநுஷ்டிக்க விரும்புவோன் எவனும் காட்டிற்குச் செ

ன்று தனியே வஸித்துவந்தான்: என், இந்தியாவில்மட்டு மென்ன? எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும், தியான ஸமாதி முறைகளைக் கைக்கொண்ட தபஸ்விகள் இருந்திருக்கிறார்கள். இவர்களைத்தான் ஹிந்துக்கள் வானப் பிரஸ்தர்கள் என்று கூறுகிறார்கள். அப்படித் தனித்துச் சென்றால்தான், மூச்சுவிடவாவது சாவகாசம் ஏற்படுகிறது. அப்போதுதான், விஷயங்களை ஒன்றிற்கொன்று முரண்பா டில்லாமல் நேர்மையாய்ச் சிந்தித்து அறியஇயலுகின்றான். அவனுக்கு மனப்போராட்டம் விளைக்கக் கூடிய தொன்றும் அங்கில்லை. வனத்தின்கண் உள்ள பிரகிருதியமைப்பின் அழகே மனச் சமாதானத்தை உண்டுபண்ணுவதற்கு மிகச் சாதகமா யிருக்கிறது.

ஆனால், ஸங்மார்க்கத்தின் அப்யாஸமுறையை ஏற்கன வே மேற்கொண்டுள்ள ஒருவர் பக்கத்திலேயே வஸிப்பது மேற்கூறியதைக்காட்டிலும், அநேக வழிகளில் சாதகங்களை உடைத்து. அவர் ஏற்கனவே அப்யஸித்தவராகையால், அவ ருடைய ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்கள் கண்டபடி நாஸுவிதங் களாய்ச் சலிக்கின்றனவல்ல. குறிப்பிட்ட சிற்சில பிரயோ ஜனமுள்ள வழிகளில்தான் சலிக்கும். அதனாலேயே அவ ருடைய ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களினின்று வெளியேறி வியாபிக்கும்சக்திகள் மிகவும் பலமாய்ப் பிறரை வசப்படுத் தும் தன்மையனவாகின்றன. பற்பல வழிகளிலும் பிரவிர் த்தி இருந்தால் நியாயமாகவே, சக்தியானது சிதறிப்போகு மன்றோ! குருவானவர் விழித்திருந்தாலும், தூங்கிக்கொண் டிருந்தாலும் அவர் சரீரங்களினின்று வரும் சக்திகள் சிஷ் யனுடைய சரீரங்களையும் நேர்மைப் படுத்திக்கொண்டே இருக்கின்றன. நெடுங்காலமாய் நெருங்கிப் பழகிய சிஷ்ய ர்களுக்கே இவ்விதப்பயன் சித்திக்கும். அப்போதுங்கூட ஒவ்வொருவருக்கும் இது நேராது. ஆனால் நேர்மைப் படு த்தக்கூடிய சிஷ்யர் சிலருக்குமட்டுமே இச்சம்பந்தம் நேரக் கூடும். இந்தத் தொடர்புள்ள சம்பந்தம் நன்றாய்ப் பலப்

பட்டுள்ளதென்று கண்டபிறகே, குருவானவர் சிஷ்யனுக்கு, குப்தவித்யையில் சீக்கிரமான அபிவிருத்தியின் பொருட்டு, தேர்ந்த வழிகளை உபதேசிப்பார். அவ்வழிகளின் தன்மை என்னவெனில், கொஞ்சந் தவறினும் மிகக்கெடுதி விளையக் கூடியதாயும், சரியாய் நடக்கும்பக்ஷத்தில் அளவிறந்த நன்மை விளையக்கூடியதாயும் உள்ள இயல்பேயாம். அவைகளைச் சிஷ்யனுக்குக் கற்பித்தால், அவன் எவ்வளவு அரிய வருத்தங்கள் நேரினும், தமது கட்டளையை மீறாமலும், மேன்மேலும் தமது துணையை மேற்கொண்டும் நன்னெறியையே நிறைவேற்றுவான் என்று பிரத்தியக்ஷமாய்க் கண்டாலொழிய குருநாதர் உபதேசிக்கமாட்டார். குருநாதர் யாரைக் குறிப்பிட்டுத் தேர்ந்தெடுக்கிறாரோ, அவருக்கு குருநாதருடைய ஸத்ஸங்கத்தாலும் ஸத்ஸஹவாசத்தாலும், காட்டிலுள்ள மௌனிகளைக்காட்டிலும் ஆயிரம் மடங்கான நற்பயன் பெறுதற்கிடமுள்ளது.

இவ்விதம் சிஷ்யனாக அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொருவனும், மஹான்களின் அருட்சக்தி உலகில் பெருகுவதற்கு ஓர் முகத்துவாரமா யிருக்கிறான். மஹான்களுக்கு உலகில் சிஷ்யர்கள் அதிகரிக்க, அதிகரிக்க அத்தனைபேர்களின் மூலமாயும்; அவர்களுடைய அநுக்ரஹ சக்தியானது பெருகுகின்றது. எவ்விஷயத்தையும், சிஷ்யன் தான் நினைக்குமுன், குருநாதர் அதைப்பற்றி என்ன எண்ணுவார் என்று யோசித்தறிந்தே வழக்கப்பட்டவனாகையால், ஒருபோதும் குருநாதருடைய எண்ணத்திற்கு மாறாக நடக்கமாட்டான். எச்சமயத்திலும் குருநாதர் தம் சிஷ்யனின் மூலமாக ஒரு நற்செய்தியை யறிவித்தலோ, அல்லது சில யுக்திகளைப் புகட்டுதலோ சாத்தியம். சிஷ்யன் ஓர் கடிதமெழுதும் போதாவது ஓர் உபந்யாஸம் செய்யும் போதாவது, குருநாதர் பிரக்ஞைக்கு அது அந்தரங்கமாய்த் தெரியவரும். அச்சமயத்தில் ஒரு வாக்யத்தை அக்கடிதத்தில் நுழைக்கும்

படியாகவும், உபந்யாசத்தில் சில திருஷ்டாந்தங்களை எடுத்துரைக்கும் படியாகவும், சிஷ்யன் மநத்தைத் தூண்டுவதுமுண்டு. முதன்முதல் சிஷ்யன் இதை உணருகிறானில்லை. ஏதோ தன்மனத்தில் அவ்வெண்ணங்கள் தாமே உதித்தனவென்றுமட்டும் எண்ணுகிறான். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல, குருநாதரிடமிருந்து வரும் எண்ணங்கள் இவையென்று குறிப்பாயறிந்து கொள்கிறான். இவ்விதம் அறியுந்திறனைப் பெறவேண்டியது சிஷ்யனுக்கு மிகவும் அவசியம். ஏனெனில் காமலோகத்திலும் மாநஸ லோகத்திலும் உள்ள எண்ணிறந்த ஜீவன்களில் பல இவனுக்கு இவ்வித உதவி செய்கிறவைகளுமுண்டு. ஆகையால், சிஷ்யன் தான் யார் யார் மூலமாய் உதவி பெறுகிறான் என்பதை சாக்கிரதையோடு பகுத்தறியவேண்டும்.

(இன்னும் வரும்.)

C. W. லெட்பீட்டர்.

---

## நன்மொழி.

காணரிய வல்லலெல்லாந் தானே கட்டுக்
கட்டாக விளையுமதைக் கட்டோடே — தான்
வீணினிற்கர்ப் பூரமலை படுதீப் பட்ட
விந்தையெனக் காணஒரு விவேகங் காட்ட
ஊனுறக்க மின்பதுன்பம் பேரூ ராதி
இயாவ்விடவு மெனைப்போல வுருவங் காட்டிக்
கொணறவோர் மான்காட்டி மானை யீர்க்குங்
கொள்கையென வருமௌன குருவாய் வந்து.

—தாயுமானவர்.

---

# தமிழ் ஜில்லாக்களின் பிரமஞானக் கிளைச் சங்கங்களுடைய பெடரேஷன் 1916-1917ஞூத்து மஹாசபை.

இது கடைசியாக 1912-ஞூத்து "ஈஸ்டர்" விடுமுறை நாட்களில் ஆலப்பிழையில் பிரமஸ்ரீ ஜஸ்டிஸ் டி. சதாசிவ ஐயரவர்களால் அக்கிராஸனம் வகிக்கப் பெற்று நிகழ்ந்தது. 1913-ஞூத்து ஈஸ்டர் விடுமுறை நாட்களில், திருச்சூரில் அடுத்த சபை கூடுவதாக ஆலப்பிழையில் தீர்மானிக்கப் பட்டது. ஆயினும், அப்படி நடைபெறாமல் அச்சமயம் திருநெல்வேலியில் நடந்தேறிய "பாண்டியநாட்டு"ப் பிரமஞானக் கிளைச்சங்கங்களின் கான்பரன்சு மஹாசபையோடு சேர்ந்தே இதுவும், ஸ்ரீமான் பி. பி. வாடியா அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் "ஹிந்து காலேஜ்" கட்டடத்தில் சிறப்பாய் நடந்தது. அச்சமயம், தென் இந்தியா முழுவதிலுமுள்ள எல்லாக் கிளைச் சங்கங்களுக்குமாக ஓர் வருஷாந்தரக் கன்வென்ஷன் மஹா சபை ஈஸ்டர் விடுமுறை நாட்களில் அடையாற்றில் கூட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதனாலும், ஏற்கனவே பிரமஞான விஷயமாய் "ஜில்லா கான்பரென்சு" என்ற மஹா சபைகள் ஒழுங்காய்ப் பல ஜில்லாக்களில் நடந்து வந்தபடியாலும், அவைகட்குத் தமிழ் ஜில்லாக்களிலுள்ள மெம்பர்களும் பிரதிநிதிகளாய்ப் போய் வந்தமையாலும் "பிடரேஷன்" என்ற மஹா சபை அனாவசியமாய்த் தோன்றி நிறுத்தப்பட்டது. அந்தப் பிரகாரமே 1914, 1915, 1916-ஞூங்களில் அடையாற்றில் தென் இந்தியா தியசாபிகல் கன்வென்ஷன் நடைபெற்று வந்திருக்கிறது.

தமிழ் ஜில்லாக்களிலுள்ள கிளைச் சங்கங்கள் அனைவற்றிற்குமாக ஓர் பொதுச் சங்கம் இல்லாதபடியால் இவ்வருஷங்களில் பிரமஞான விஷயமான உழைப்பில் தாழ்வு ஏற்பட்டதென்றும், தெலுங்கு தேசங்கள், கன்னட தேசங்களுக்கு இத்தகைய "பெடரேஷ"னால் பிரமஞானத்தைப் பரவச் செய்யும் முறையில் மிகுந்த சாதகம் ஏற்பட்டுள்ளதென்றும் அறிந்த மேல் "தமிழ் ஜில்லாக்க

ளின் தியசாபிகல் பெடரேஷனையும் உயிர்ப்பிக்கவேண்டியது நியாயமென்று கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் நெல்விக்குப்பம் பிரணவலாட்ஜ் கிளைச் சபையோர் தங்கள் ஊரில் இந்த பெடரேஷனைச் சென்ற ஜூலை மீ 22, 23உ களில் நடத்த ஒப்புக்கொண்டு அப்படியே விமர்சையாயும் நடத்தினார்கள். ஸ்ரீமான் பி. பி. வாடியா அவர்கள் அக்கிராஸநம் வகிப்பதாக இருந்தது. சில அசௌகரியங்களால் அவர்கள் வரக்கூடவில்லை. அவர்கள் ஸ்தானத்தில் திவான் பகதூர் ஜஸ்டிஸ் டி. சதாசிவ ஐயரவர்களை சபா நாயகராக வீற்றிருக்கும்படி பெடரேஷன் காரியதரிசிகளில் ஒருவராகிய பிரமஸ்ரீ அ. ரெங்கசாமி ஐயர் வேண்டிக் கொண்டார். நெல்விக் குப்பம் பிரணவ லாட்ஜ் காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ என். ஆர். தெய்வநாயக ரெட்டியார் முதலிய பிரமுகர்களுடைய பணச்செலவின்மேல் திருவிய சபா மண்டபத்தில் உபந்நியாசங்கள் நிகழ்ந்தன.

அடையாறு, மைலாப்பூர், பெங்களூர், நெல்விச் குப்பம், பண்ருட்டி, திருவண்ணாமலை, சொரத்துப் பெரியாங்குப்பம், வாழைக்கரை, மேலக்கடம்பூர், சிதம்பரம், புவனகிரி, ரெட்டியூர், எய்யலூர் ஆலம்பூண்டி, புதுச்சேரி, கூடலூர், திருப்பாப்புலியூர், எனங்குடி, திருமியச்சூர், நாகூர், திருப்பணி வட்டாரம், மாயவரம்: தஞ்சாவூர் கும்பகோணம், விழுப்புரம், மானம்பூண்டி, மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், ஆகிய இருபத்தெட்டு ஊர்களிலிருந்து மொத்தம் 148 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

முதல் நாள் காலை 8 மணிமுதல் 9 மணிவரை நடந்த ஈ. எஸ். ஜெனரல் மீட்டிங்கு முடிந்தவுடன் 9-15 மணிக்கு சபை கூடியது. ஸ்ரீமான் பி. பி. வாடியா அவர்களும், பிரமஸ்ரீ எ. நீலகண்ட சாஸ்திரியாரவர்களும் வரக்கூடாமை பற்றி அனுப்பியிருந்த தந்திகளை அக்கிராஸநர் முதலில் வாசித்தார். அக்கிராஸநர் ஸ்ரீகிருஷ்ண பகவானிடமிருந்து அபயத்தைப் பிரார்த்தித்து விஷயக் கிரமங்களை ஆரம்பித்தார்.

முதலில் பென்ஷன் ஜட்ஜ் பிரமஸ்ரீ டி. ராமச்சந்திர ராவ் அவர்கள் தெலுங்கில் மிகத் தெளிவான நடையில் பஞ்சயக்ஞத்தின் கருத்தை விளக்கி, நித்திய ஆசரணையில் தற்கால நிலையில் சகல மனிதர்களும் அதை எவ்விதம் அனுசரிக்கலாம் என்பதைக் கூறி

னர். தெலுங்கு தெரியாத தமிழர்களுக்கு உணர்த்தும் பொருட்டு சபா நாயகரவர்கள் சாரத்தைச் சுருக்கமாய் எடுத்துரைத்தார்.

மாலை 4-15 மணிக்கு ஆரம்பித்து 4-45 வரை பிரமஸ்ரீ ஜெ. ஸ்ரீநிவாச ராயரவர்கள் தெலுங்கில் பக்தி என்பதைப் பற்றி ஓர் அழகான உபந்யாசம் செய்தார். அதையும் அக்கிராஸனர் தமிழில் இனிது எடுத்துரைத்தபிறகு "பூர்ணசந்திரோதயம்" பத்திராதிபர் பிரமஸ்ரீ அ. ரெங்கஸ்வாமி ஐயரவர்களால் பிரமஞான தர்சநத்தைத் தழுவி "அரசாட்சி முறை" என்பதைப் பற்றி ஓர் விஸ்தாரமான உபந்நியாசமும், மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் பிரமஸ்ரீ வி. ராமச்சந்திர ஐயரவர்களால் "நமது குழந்தைகளின் வருங்கால மஹிமையும் அதற்கேற்ப நாம் நித்தியப்படி நடந்துகொள்ள வேண்டிய விதமும்" என்பதைப்பற்றி ஓர் பிரசங்கமும் நடந்தன. அக்கிராஸநரும் ஒவ்வொரு உபந்நியாசத்தின் முடிவிலும் சாராம்சங்களைச் சுருங்கச் சொல்லிவந்த அழகு எல்லாருடைய மனங்களிலும் ஆழப் பதிந்தது. பின்பு சபை கலைந்து இரவு 7-15 முதல் 8-15 வரை "உதயதிசை நக்ஷத்திர சங்கத்"தார்க்கென்று தனிக்கூட்டம் ஒன்று கூடியது.

அன்று மத்தியானம் 2-30 முதல் 3-30 வரை காரியாலோசனை சபை பிரமஸ்ரீ டி. ராமச்சந்திர ராவ் அவர்கள், திவான் பகதூர் ஜஸ்டிஸ் டி. சதாசிவ ஐயரவர்கள் இவ்விருவர் அக்கிராஸநத்தின் கீழ் நடந்தது. எனங்குடி மகா-ள-ள-ஸ்ரீ வி. ராமச்சந்திர நாயுடு அவர்கள் தமிழ் ஜில்லா தியசாபிகல் பெடரேஷன் பிரெஸிடெண்டாகவும், பூர்ணசந்திரோதயம் பத்திராதிபர் பிரமஸ்ரீ அ. ரெங்கசாமி ஐயரவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப் பெற்றார்கள். அடுத்த வருஷம் பண்ருட்டியில் பெடரேஷன் கூடவேண்டுமென்று, வந்திருந்த அவ்வூர்க் காரர்கள் அழைத்ததையும் சம்மதித்துக் கொண்டார்கள். வருஷா வருஷம் இந்த பெடரேஷன் ஜூலை மீ கடைசிச் சனிக்கிழமைக்கு முந்தின சனிக்கிழமையிலும் அதை ஒட்டிய ஞாயிற்றுக் கிழமையிலும் கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பூர்ணசந்திரோதயம்:—பிரமஞான விஷயத்தைத் தமிழர்களுக்குள் பரவச்செய்வதற்கு ஏற்ற சாதனமாய் இது சென்ற 6 வருஷங்களாக சிறந்த நற்பயனை விளைத்திருக்கின்றது. இது, தமிழ்

பெடரேஷனின் அங்கமாகவே ஏற்பட்டு நடந்து வருகிறது. இது மேன் மேலும் தமிழர்களுக்குள் உபயோகம்பெறும்படி செய்வது பிரமஞானியாயுள்ள தமிழன் ஒவ்வொருவனையும் பொறுத்த கடமையாகும். இதற்கு சுமார் 1000 சந்தாதார்கள் இருக்கிறார்கள். இதில் 700 பேர்கள் ஆங்கிலந் தெரியாத மெம்பர்களாகையால், அவர்கட்கு "தியாஸபி-இன்-இந்தியா" என்ற இந்தியன் ஸெக்ஷன் ஆங்கிலப் பத்திரிகைக்குப் பதிலாக அனுப்பி வருகிறோம். அவ்வெழுநூறு பிரதிகளுக்கும் வருஷம் 1-க்கு ஒரு ரூபாவுக்குங் குறைந்த சந்தா வீதம் தான் நமக்குக் கிடைக்கிறது. ஆதலால் போதுமான வருவாய் கிடைக்கின்றதில்லை. இவ் ஆறு வருஷங்களில் இரண்டு ரூபாய் கொடுக்கும்சந்தாதார்கள்வருஷா வருஷம் குறைந்தும், ஒரு ரூபாய் வீதம் கொடுக்கின்ற ஷை பிரஹ்மஞான சபை மெம்பர்கள் அதிகரித்தும் வந்திருக்கின்றமையால், இவ்வருஷம் செலவுக்குப்போதுமான வருமானம் கிடைக்கவில்லை. ஆகையால் தமிழர்களான பிரஹ்மக் ஞானசபை மெமபர் ஒவ்வொருவரும் பிரதிவருஷமும் ஓர் புதியசந்தாதாரைச் சேர்த்துக் கொடுக்க முயல்வது சிரமமாகாது. அவ்விதம் செய்யின் நம் பத்திரிகை நிச்சயமாய் அதி சீக்கிரம் மேம்பாடடையும் என்பதிற் சந்தேகமில்லை. ப. நாராயண ஐயரவர்கள் பலரிடமிருந்து ஆயுட்கால முழுமைக்குமுரிய மொத்த சந்தாக்களாக ரூ 50, 100 வீதம் வசூலித்துச் சேர்த்திருக்கும் ரூ 1100 மட்டும் இப்போது கைவசமுள்ளது. வரும்படி போதாமையால் இம்மூலதனத்திலிருந்து எடுத்துச் செலவழிப்பது தர்மமாகாது. நாம் செய்ய வேண்டிய முக்கிய முயற்சிகளுள் மூலதனத்தை விருத்திக்குக் கொண்டுவரவேண்டியதும் அவ்வவ்வருஷச்செலவுக்குக்காணும்படியாக புதிய சந்தாதார்களைச் சேர்ப்பதும் நமது கடமையாகும். இவ் வருஷம் 150 சந்தாதார்களை எல்லோருமாகச் சேர்ப்பது பெரிய காரியமல்ல. ஆர்டர் கார்டுகள் வேண்டுவோர் எமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்வர்ணமணிமாலைச் சங்கம்:—இது காலஞ்சென்ற ப. நாராயண ஐயரவர்களின் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தப்பட்டது. அவர்களுடைய பல நண்பர்களிடமிருந்து வசூலித்து தொகை ரூ 145 மூலதனமாக உள்ளது. இதுவரை மொத்தம் 12 சஞ்சிகைகள் நர் தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியரின் உபயோகத்திற்காக வெளிவந்துள்ளன. இவைகளைச் சிற்சில ஊர்களில், நீதி முறை போதிப்பத

ற்கு உபயோகப் படுத்துகிறார்கள். 50 துண்டுப் பத்திரிகைகள் ரூ. 1 வீதம் கொடுக்கப்படுகின்றன. இவைகளை உபாத்தியாயர்கள் விலைக்கு வாங்கிச் சிறு பிள்ளைகட்கு இனாமாகக் கொடுத்து அவர்களைப் படிப்பித்து நல்வழியில் நடத்துகிறார்கள். ஒவ்வொரு தமிழ்க் கிளைச்சபையும் இம்முறையில் சிறிது முயற்சி எடுத்துக்கொள்வது சிலாக்யமாகும்.

உதயதிசை நக்ஷத்ர ஸங்கம்:— இச்சங்கம் சம்பந்தமான துண்டுப் பத்திரிகைகள் நான்கு, வகைக்கு 10,000 காப்பிகள் வீதம் மொத்தம் 40,000 காப்பிகள் அச்சிடப்பட்டுள்ளன. அதற்கு மொத்தச் செலவு ரூ 71—11 ஆயிற்று. அயலூர்களிலிருந்துகேட்டோர்களுக்குஅனுப்பியவகையில் தபாற்கூலி ரூ 7-11-9. ஆ. ரூ 79-6-9க்கு நன்கொடை மூலமாகவும் துண்டுப் பத்திரிகைகளின் விற்பனை மூலமாகவும் ரூ 57-3-0 தான் கிடைத்திருக்கிறது. மீதி ரூ 22-3-9 இச்சங்க அபிமானிகள் நன்கொடையாகக் கொடுத்தாலும் துண்டுப் பத்திரிகைகளை இன்னும் ஏராளமாய் விலைக்கு வாங்கிக்கொண்டாலும் எமக்கு மிக்க உபகாரமாகும்.

இம்மூன்று விஷயங்கட்கும் இந்த பெடரேஷனைச் சேர்ந்த கிளைச்சபைகளும் மெம்பர்களும் அவரவர்களால் இயன்ற மட்டும் உபகரிக்கவேண்டுகிறோம்.

இவைகள் மட்டும் பூர்ணசந்திரோதயம் காரியஸ்தலம் குமாஸ்தா பி. யஸ். ராமசுப்பையரால் வாசிக்கப்பட்டன.

இந்த பிடரேஷன்களில் சாப்பாட்டு வகையில் டாம்பீகத்தை விலக்கவேண்டுமென்று மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் பிரமஸ்ரீ வி. ராமச்சந்திர ஐயரவர்கள் வற்புறுத்தியபடி மேற்கூறிய சாசுவதமான வழிகளில் திரவியம் அதிகமாய்ச் செலவிடுவது உத்தமமெனத் தோன்றுகிறது.

மறுநாள் காலை 8 மணி முதல் 9 மணி வரை ஈ-எஸ்-செக்ஷன் மீட்டிங்கு நடந்தபிறகு 9-15 மணிக்கு சபை தொடங்கியது. முதலில் கனம் வி. கே. ராமானுஜா சாரியரவர்கள் "பிரமஞானமும் நமது நித்திய கருமமும்" என்ற விஷயமாயும் பிரமஸ்ரீ வி. ராமச்

சந்திர ஐயரவர்கள் "மஹாத்மாக்களை அடையும் வழியை"ப் பற்றியும் உபந்யசித்தார்கள். அன்று பகலில் 'நமது கடமை' என்னும் விஷயமாய் எனங்குடி மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமச்சந்திர நாயுடு அவர்கள் ஓர் அரிய பிரசங்கம் செய்தபின் கூடியிருந்த சபையோர்களில் பலர் கேட்ட கேள்விகளுக்கு பிரமஸ்ரீ சதாசிவ ஐயரவர்கள் விடை பகர்ந்தார். பிறகு சபையில் கூடியிருந்து மிகவும் பக்தி சிரத்தையோடு உபந்யாசங்களைக் கேட்ட எல்லோருக்கும் அங்கு உதவிய வாலண்டியர் பிள்ளைகளுக்கும் அக்கிராசநர் வந்தன மளிக்கவே, ஒருவர் சமஸ்கிருத சுலோக ரூபமாக ஒரு ஸ்துதி சொல்லி முதலில் சபா நாயகருக்கும் மற்றுமுள்ள கனவான்களுக்கும் பூமாலை சூட்டி, பின் மற்றையோருக்கும் புஷ்பம், சந்தனம், தாம்பூலம், வழங்கப் பெற்று சபை கலைந்தது.

அவ்வூரார் அதிதி தர்மத்தைச் சிறப்பாய் நடத்னுள். திர்க இறைவனருளாலும், மஹாத்மாக்களின் கிருபையாலும் எல்லாம் இனிது நிறைவேறியது.

பி. எஸ் ராமசுப்பையர்.

174

## நன்மொழி.

உன் மனத்தைச் சோம்பேறித்தனமா யிருக்கவிடாதே. எடுத்த கார்யம் முடிந்ததும் நல்ல எண்ணங்களே உன் மனத்தில் வந்து தங்கும்படி எப்பொழுதும் நல்ல எண்ணங்களே உன் மனத்தைப் பின் பற்றி நிற்கட்டும்.

—தியானக்கிரம விஷயம்,

## புத்தக வரவு.

---

(1) எரோப்பிளேன், (2) ஹிதோபதேசக் கதைகள், (3) கடற் சுரங்கங்கள், (4) நன்றியறிவுள்ள துருக்கன் சரித்திரம், (5) க்ரிஸெல்டா, (6) ஒரு கன்னியா ரத்தினம், (7) ஹங்கேரி தேசத்து எலிஜபெத்து அம்மாள் சரித்திரம், (8) ஹாவார்டு என்னும் லோகோபகாரி (9) ஐந்து நீதிக்கதைகள், (10) லியோனிதாஸ் கிரேக்கவீரன், (11) மக்பெத், (12) வாலேஸ் என்னும் ஸ்காட்லண்டு தேசவீரன் சரித்திரம். திருச்சி ஜி. வைத்தியநாத ஐயர் B. A. L. T. ஆல் வரைந்து பிரசுரம் செய்யப்பட்டன. சிறுவர் சிறுமிகள் பிரயோஜனத்துக்காக சிறுதுண்டுப் பத்திரிகைகளாக எழுதப்பட்டுள்ளன. விலை மிக சரசம். 1-வது, 2-வது ரூ 0—0—3 வும், 12-வது ரூ 0—1—6 வும், மற்றவை ஒவ்வொன்றும் 0-1-0 வும் விலை.

சுலபமான நடையில் சிறுமி சிறுவர்களுக்கு உபயோகப்படுமாறு தற்காலத்தில் யந்திர நிர்மாணகர்களால் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள ஏரோப்பிளேன் என்ற ஆகாய மோட்டாரையும், எதிரிகளின் கப்பல்களைத் தாக்கி சின்னாபின்னமாக்குவதற்காக கடல்களில் உபயோகிக்கப்படும் வெடிமருந்தடங்கிய வெடியந்திரமாகிய கடற் சுரங்கங்களையும் பற்றியும், ஆங்கிலத்தில் மிக அழகாய் வரையப்பட்டு குழந்தைகளின் மனதுக்குவந்த நன்றியறிவுள்ள துருக்கன் சரித்திரமும், பொறுமையையணியாய்க் கொண்ட க்ரிஸெல்டா என்ற மாதுசிரோமணியின் வரலாறும், ஆசியா கண்டத்து உத்தரபாகத்தில் ஸைபீரியாவில் தள்ளுண்ட தன் தகப்பனாரை காதரைன் என்ற ஓர் மாது சொல்லொணாப் பாடுபட்டு விடுவித்த விருத்தாந்தமும், தேசத்து ராணியாயும், மனைவியாயும், இருந்த போதும், அப்பதவிகளையிழந்து துயருற்றபோதும், ஒரே மனதாய் தர்மிஷ்டையாய் பிறர்நலத்தை தன்நலமாய்க் கருதிய உத்தமியான எலிஜபெத்தின் சரிதையும், மேனாட்டு ஜெயில்களைச் சீர்திருத்துமாறு தன் வாழ்நாள் முழுதும் செலவழித்த ஹாவார்டு என்னும் லோகோபகாரியின் ஜீவியசரிதமும், தேசாபிமானிகளுள் சிறந்து குன்றாத புகழ்பெற்ற லியோனிதாஸ் என்ற கிரேக்க வீரனுடையவும் வாலெஸ் என்ற ஸ்காட்லாண்டு தேச வீரனுடையவும் அசகாயச் செயல்களின் வரலாறும், மிக்க நன்றாய் எழுதப்பட்டுள்ளன. இவைகளைப் படிக்கும் நம் சிறுவர்கள் மிகப்பயன் பெறுவார்கள். ஷேக்ஸ்பீயர் என்ற உலகப் பிரசித்திபெற்ற மகாகவியின் மக்பெத் என்ற நாடக நாயகன் கதையும் வெகு தெளிவாய் சொல்லப்பட்டி

ருக்கிறது. ஐந்து நீதிக்கதைகளிலும் ஹிதோபதேசக் கதைகளிலும் சொல்லப்பட்டவை நமது பஞ்ச தந்திர மாதிய புத்தகங்களிலிருந்து எழுதப்பட்டனவாய் தோன்றுகின்றன. இவ்வாசிரியர் சிறுவர் பால் செய்திருக்கும் இப்பேருபகாரத்துக்கு நன்றி பாராட்டற்பாலது. இனிமேல் நமது தேசத்து வீரர்கள், அரசர்கள், தேசாபிமானிகள் இவர்களுடைய கதைகளையும் இம்மாதிரி எளிய நடையில் எழுதி ஆயிரக் கணக்காய் தமிழகம் முழுதும் பரவும்படி செய்வாராக. அந்தந்த தேசத்து வீரர்களின் சரித்திரத்தால் அந்தந்த தேசத்துக் குழந்தைகள் மனதுருகும் மாதிரி அந்நியதேசத்து வீரர்களின் சரித்திரத்தால் மனது அவ்வளவு உருகமாட்டாது என்பது வெளிப்படை. ஆகையால் நம்முடைய குழந்தைகளைத் தேசவிசுவாசிகளாக்கும் நன் முயற்சியில் இவ்வாசிரியர் பாடுபடுவார் என்று எண்ணுகிறோம்.

---

**உபநிஷத் பஞ்சகம்:**—அடையாறு புத்தகசாலை பண்டிதர் பெ. நா. ராமநாத சாஸ்திரிகளால் கர்ப்போபநிஷத், ஜாபாலி உபநிஷத், வாஸுதேவோபநிஷத், யோகதத்வோபநிஷத், ஸந்யாஸோபநிஷத் என்ற ஐந்து உபநிஷத்துக்கள் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றது. விலை அணு 5 ஆக்கியோரிடம் பெறலாம். முதற்கூறிய உபநிஷத்தில் சரீரத்தின் ஸ்வரூபமும், கர்ப்போத்பத்திக் கிரமமும், சர்ப்பத்தில் ஜந்துவிருக்கும் விதமும், இந்த சரீரத்தின் தத்வமும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. ஜாபாலி உபநிஷத்தில் பசு, பதி இவர்களின் ஞானமும் விபூதியின் மாகான்மியமும், வெளியிடப்பட்டிருக்கின்றன. மூன்றாவதில் ஊர்த்வபுண்ட்ரத்தின் மகிமையும் அதற்கு முதல்சாதனமான கோபீ சந்தனத்தின் விசேஷமும், அதை தாரணம் செய்யும் விதமும் கூறப்பட்டுள்ளன. யோகதத்வோப நிஷத்தில் யோகாப்பியாசம் செய்யும் விதமும், யோகியின் நியமங்களும், அவனால் உலகிற்கு நன்மையும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸந்யாஸோபநிஷத்தில் ஸந்யாஸி யாவதற்கு யார் அர்ஹர்கள், எத்தனை விதமாக ஸந்யாஸிகள் அவரவர்களுடைய பரிபக்வத்துக்குத் தக்கவாறு பிரிக்கப் பட்டிருக்கின்றார்கள், அவர்களுடைய நியமங்கள், அவைகளுக்குக் காரணங்கள், ஸந்யாஸியின் மனோபாவம்முதலியவை துலக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பாசிரியர் மிகுந்த சிரத்தையும் சிரமமும் எடுத்துக்கொண்டு, மிகத் தெளிவான நடையில் எழுதியுள்ளார். இடையிடையே அவசியமாய் உபயோகிக்கப்பட்ட சில ஸம்ஸ்கிருத பதங்களுக்கு அர்த்தத்தையும் கொடுத்திருந்தால் இன்னும் மிகவும் உபயோகமாயிருக்கும்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

### விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

## குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரு அ பை |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-க்கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

# இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஹுல் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

# ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்.

**சஞ்சீவி**

**பாலமித்ர.**

300 மாத்ரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்ருய் ஆலோசனைசெய்து திருப்தியான விடைகொடுக்கிருேம்

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

## இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும, சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிருர்கள்.

## முதன்மையான

மருந்து சென்ற35-ஹுல காலமாய் உபயோகிப்போருக்கு அற்புதகுணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் 32. மாத்ரையின் விலை ரூ 1.

---

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜீ**

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, மதராஸ்.

96. மவுண்ட்ரோட், மதராஸ்.

இருமல், கபம், காசம் இவைகளுக்கு சிறந்த மருந்து.

**காசாந்தக**

மாத்ரைகள் டப்பி 1-க்கு விலை ரூ 1.

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிருேம்.